www.padippakam.com

# தமிழ்நேயம்

இதழ் - 8 மார்ச்சு 1999



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா ஒரு நாடா?

தன்னாட்டுக் குடிமகனைத் தடிமாட்டுச் சிங்களவன்
எந்நாட்டுக் காரனுக்கும் இல்லாத திமிருடனே
கன்னாபின் னாஎன்று கடல்நடுவில் சாகடித்தும்
என்னென்று கேளாமல் இருப்பதுவும் ஓர் அரசோ?

தமிழகத்து மீனவரைத் தம்சொந்தக் கடல்நடுவில்
திமிர்பிடித்த சிங்களவன் திட்டமிட்டுச் சுட்டழித்தும்
இமைநடுக்கம் இல்லாமல் இழிபதவி வேட்கையினால்
தமிழரசும் தில்லியரின் தாள்நக்கப் போனதுவே!

கடல்நடுவில் எல்லையினைக் கடவாத ஒருநாட்டுக்
குடிமகனை அயல்நாட்டான் கொல்வதற்குச் சட்டமில்லை.
தடிஎருமைத் தில்லிக்கேன் தன்கடமை உறைக்கவில்லை?
எடுபிடிதான் தமிழன் எனும் இளக்காரம் காரணமே.

பதவியிலே உயர்ந்தவனோ, படித்தவனோ, பார்ப்பானோ,
இதுபோலச் சுடப்பட்டால் இப்படியா நாடிருக்கும்?
பதறிமிக நடுநடுங்கிப் பாய்ந்தெழுந்து சீறிடுமே!
எதுவுமிலா மீனவர்கள் என்பதுவும் மெத்தனமோ?

ஈழத்துத் தமிழனைத்தான் ஏமாற்றிக் கைவிரித்தீர்,
பாழ்பட்ட தமிழ்நாட்டுப் பாழ்ந்தமிழன் ஏது செய்தான்?
சீழ்பிடித்த பார்ப்பனருஞ் சிங்களர்க்கே வால்பிடிப்பார்;
ஆழத்தில் அவர் வடவா ஆனதினால் தான்இதுவே!

இந்தியநீ ரோட்டத்தில் இணைந்திடுக என்று தமிழ்
மைந்தருக்குச் சொல்வீர்; அம் மைந்தர்நிலை இன்றென்ன?
கொன்றழித்தான் சிங்களவன்; குலைபதறாப் பேய்அரசே,
இந்திக்கா ரன்செத்தால் இடித்தபுளி ஆவாயோ?

அரசியலில் பாழ்ந்தமிழன் அடிமையாய்ப் போனதினால்
ஒருகுற்றம் செய்யாத உழைப்பினத்தார் சாவதுவோ?
சுரணைகெட்ட தமிழ்நாடே, சூழ்ச்சிமிகு தில்லியரே
உரிமையற்றீர் நாடாள, ஒழிந்திடுவீர் காட்டுக்கே,

அரசியலில் புதுக்கொள்கை ஆயிரந்தான் பேசிடினும்
உரிமையுறு குடிமக்கள் உயிர்காப்பே முதன்மைஎனத்
தெரியாத முண்டங்காள், சீ, ஏன்டா ஆள்கின்றீர்?
ஒருநலமும் செய்யாமல் ஓட்டுவதும் நாய்ப்பிழைப்பே.

– தங்கப்பா

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ்நேயம் : ஆசிரியர் உரை

# எப்போது தீரும் எப்படித் தீரும் தமிழ் ஈழச் சிக்கல்?

தமிழ் ஈழச் சிக்கலில் தீர்வுக்கான வழி இன்னும் தெரியவில்லை. இலங்கையின் தலைநகரிலேயே அனைத்து மதத்தினரும் அமைதிப்பேரணி நடத்துகின்றனர். யாழ்ப்பாணம் சென்று திரும்பிய அனைத்து மதத்தலைவர்களும் போரை நிறுத்தவும் அமைதிக்கான உடன்படிக்கையை அரசு முனைந்து மேற்கொள்ளவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

பிரபாகரனிடம் நாட்டை ஒப்படையுங்கள். நாடு அவர் கைகளில் பத்திரமாக இருக்கும் என்று பவுத்த துறவி கூறுகிறார். கொழும்பிலுள்ள பெரு வணிகர்கள் பேராசிரியர் ஒருவரைக் கொண்டு மக்கள் மத்தியில் கணிப்பிற்கு ஏற்பாடு செய்ய இருக்கின்றனர். அரசின் கட்டுப்பாட்டில் இராணுவம் இல்லை.

ஆணவத்தோடு செயற்படும் இராணுவம் போரில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்ற நிலையில் சந்து பொந்துகளில் புகுந்து இனப்படுகொலை செய்கிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து காணாமல் போவோர் தொகை தொடர்ந்து அதிகரிக்கிறது. பிளாட் அமைப்பும் டெலோ அமைப்பும் ஒருவரை மற்றவர் வஞ்சம் தீர்க்கும் முறையில் கொன்று கொண்டிருக் கின்றனர். மாணவர்களின் கல்வி வாய்ப்புக் குறைகிறது.

தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் பரிசளிப்புவிழா முதலியவற்றில் அரசதிகாரிகள் சிங்கள மொழியில் பேசுகின்றனர். பொருளாதாரத்திற்குச் செலவிடும் தொகையைக் காட்டிலும் இராணுவத்திற்கான செலவு தொடர்ந்து அதிகரிக்கிறது. இந்தியாவில் இருந்தும் தென்னாப்பிரிக்காவில் இருந்தும் ஆய்வுக் குழுக்கள் சென்று திரும்புகிறார்கள்.

வடமேற்கு மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் அரசின் ஆதரவோடு ஆளும் கட்சி செய்த ஊழல்களுக்கு அளவில்லை. ஏப்ரல் 1ல் நடத்தும் விரிவான தேர்தல்கள் இதே முறையில் தான் இருக்கும். தமிழ்மக்களுக்கு ஆதரவான குரல்கள் உலகளவில் எழுகின்றன. மனித உரிமைகளை இராணுவம் மதிப்பதாக இல்லை. இராணுவம் நடத்தும் போர் உண்மையில் சிங்கள மக்களுக்கும் எதிரான போர்தான்.

அரசியல் கட்சிகள் தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக மக்களின் நலன்களுக்கு எதிராகத்தான் செயற்படுகிறது. இந்திய அரசை நம்பி பயனில்லை. எல்லா வாய்ப்புக்களையும் எதிரிகளுக்கு விட்டுக்கொடுத்த நிலையில் தமிழக முதல்வர் கண்ணீர் வடிக்கிறார்.

மலேசியாவிலும், கர்நாடகத்திலும் சிறைப்படுத்தப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்வது குறித்து கனவு காண்கிறார். புலம் பெயர்ந்த தமிழர்களுக்குள்ளும் புகைச்சல்கள் இல்லாமல் இல்லை. வேருகளிலிருந்து வெட்டப்பட்ட நிலையில் அன்னியக் கலாச்சாரத்திற்கு அவர்களும் அடிமையாகி அழிகிறார்கள்.

தமிழ் ஈழத்திற்கு விடுதலை கிடைத்தாலன்றி தமிழ் மக்கள் தமக்கான வாழ்வைப் பெறமுடியாது என்ற போதிலும் இடையில் ஏற்படும் எந்த உடன்பாட்டையும் நாம் வரவேற்கிறோம்.நெடுங்கால வரலாற்றையும் இலக்கியம் பண்பாடு முதலியவற்றையும் பெற்றிருக்கும் தமிழன் இன்றைய உலகில் தலை நிமிர்ந்த நிற்க நாடு ஒன்று வேண்டும். அது தமிழ் ஈழமாகத் தான் இருக்கும் என்பது குறித்து இப்பொழுதே நாம் பெருமைப்படுகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்நேயம் : அகமும் புறமும்

## முதல்வரின் பொருமல்

சட்டசபையில் பொருமலோடு முதல்வர் தமிழர் நலன்களுக்கு கேடு சூழ்பவர்கள் குறித்துச் சிலவற்றைச் சொல்லியிருக்கிறார். சென்றவிடமெல்லாம் தமிழர்கள் பாதுகாப்போடு வாழ முடியவில்லை. அடிக்கடி அவர்கள் கலவரங்களுக்கு உள்ளாகித் துரத்தப்படுகிறார்கள். வேலை வாய்ப்பிற்காகச் சில நிறுவனங்களின் ஏமாற்றுக்கு இடம் கொடுத்துச் சிங்கப்பூருக்கும் மலேசியாவிற்கும் சென்றவர்கள் அங்கு சிறைப்படுத்தப் பட்டுள்ளனர். வீரப்பனைத் தேடுகிறோம் என்று சொல்லி தமிழ்ப் பெண்களையும், ஆண்களையும் கர்நாடக அதிரடிப்படையினர் துன்புறுத்தி இரண்டாண்டுகளுக்கு மேலாக தாடா சிறையில் அடைத்துள்ளனர். கடைசியாக மைய அரசு தேர்வாணைக் குழுவால் தெரிவு செய்யப்பட்டுக் கர்நாடக கணக்கியல் துறை பணிக்கு சென்ற 19 பேர்கள் பணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. கர்நாடகம் தமிழக முதல்வர் உட்பட தமிழர்களை எத்தனை கேவலங்களுக்கு உள்ளாக்கி வருகிறது. வீரப்பனை கருணாநிதிதான் ஒளித்து வைத்திருப்பதாகக்கூட படேல் சொல்லுமளவிற்கு அவர் தாழ்ந்திருக்கிறார். இவரிடம் தான் காவிரியை ஒப்படைத்து கலைஞர் கையெழுத்திட்டு வந்தார். வீரப்பன் விவகாரம் பெரும் வடிவெடுத்த போது தமிழ்நாட்டிற்கு வந்த படேலிடம், தடா சிறையிலிருந்து தமிழர்களை முதலில் விடுவிக்க வேண்டுமென்று முதல்வர் கேட்டிருக்கவேண்டும். காவிரி உடன்படிக்கையில் கையெழுத்து இட்டிருக்கக்கூடாது. இப்பொழுது படேல் நம்மை ஏளனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார். முன்னாள் முதல்வரின் மிரட்டல்களுக்கு இடம் கொடுத்து மையஅரசு தமிழக முதல்வரிடம் விளையாடுகிறது. ராஜிவ் காந்தி தொடர்பான விசாரணை இன்னும் முடியவில்லை என்கிறது. நீதிமன்றங்களில் குளறுபடி செய்தேனும் ஊழல் முதலையைப் காப்பாற்ற விரும்புகிறது மையஅரசு. இப்பொழுது கலைஞர் வடிக்கும் கண்ணீரில் ஒரு சொட்டேனும் ஈழத்தமிழர்களுக்காக இல்லை. கலைஞர் துயரத்தில் நாமும் பங்கு பெறுகிறோம். எல்லாவற்றையும் எதிரிகளுக்கு விட்டுக் கொடுத்ததுதான் விளைவு இந்த கண்ணீரும், துயரமும். கலைஞரின் பெருந்தன்மையை நாமும் தான் மதிக்கிறோம். படேல் அளவுக்கு அரசியலில் தாழ்ந்து போகமுடியாது. மைய அரசுக்கு கலைஞர் அடிபணிவதை தமிழர் அதிக காலம் பொருத்துக் கொள்ளவும் இயலாது. தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கான வாய்ப்பைக் கலைஞர் தவறவிடக்கூடாது. இது நமக்கு இறுதி வாய்ப்பு.

## இலக்கியத்தின் அரசியல்

இன்றைய தமிழ்ப் புதுக்கவிஞர்களில் தேவதேவன் குறிப்பிடத்தக்கவர். இதுவரை எட்டு தொகுப்புகளை வெளியிட்டிருப்பதோடு தமிழ்க்கவிதையை தரிசனம் என்ற தளத்திற்கு உயர்த்தியவர் என்ற முறையில் இவரை பிரமிள் முதலிய ஒரு சிலரோடு வைத்துப் பேசமுடியும். தேவதேவனை முன்வைத்த நவீனத்துவத்திற்குப் பின் – தமிழ்க் கவிதை என்ற முறையில் அண்மையில் ஜெயமோகன் அவர்களின் நூல் வெளிவந்துள்ளது. சங்க இலக்கியம் தொடங்கி தமிழ்க்கவிதை வரலாற்றை சிறப்பாகச் சொல்லுகிறார் ஜெயமோகன். தமிழவன் தொடங்கி நவீனத்துவம், பின்நவீனத்துவம் குறித்த கோட்பாடுகளை தமிழுக்கு தந்தவர் என்ற முறையில் இன்று ஜெயமோகனையும் நாம் குறிப்பிடமுடியும். வீடு, மரம், பறவைகள் ஆகிய படிமங்கள் வழியே

படிப்பகம்

www.padippakam.com



தேவதேவனுக்குள்ளிருந்து வெளிப்படும் தரிசனம் குறித்து சிறப்பாக எடுத்துச் சொல்கிறார் இந்த நூலில் ஜெயமோகன். புலன் கடந்த ஒரு பேருணர்வு தரிசனம். இயற்கையோடும் பிரபஞ்சத்தோடும் தன்னை இணைத்தும் இறுதியில் இவற்றில் தன்னை கரைத்துக்கொண்டும் இந்த நிலையில் தானும் அதுவும் என்ற வேறுபாடு அற்ற ஒரு காட்சி தரிசனம். தேவதேவனுக்குள் செயற்படுவது இத்தகைய தரிசனம். இந்தியாவின் மதங்கள் வழியே வெளிப்படும் தெய்வக்காட்சியின் இன்றைய சூழலிலான வெளிப்பாடு என்றும் இதனைக் குறிப்பிடலாம். (ஜே.கே. மற்றும் ஓசோவுக்குள் வெளிப்படுவதும் இத்தகைய தரிசனம்) இயற்கையோடும் சமூகத்தோடும் தன்னோடும் முற்றான இணைவில் வெளிப்படும் இந்தத் தரிசனம் மார்க்சியருக்கும் உடன்பாடாகத்தான் இருக்க முடியும். கருத்தியல்/மெய்யியல் தளத்திலிருந்து கீழிறக்கி அரசியல் மற்றும் பொருளியலில் சமதருமம் என வெளிப்பாடு கொள்ளத் தகுந்தது இந்த தரிசனம்.

தமிழகத்தின் இலக்கியச் சூழலில் ஜெயமோகன் அடிக்கடி தாக்கப்படுகிறார். தேவதேவன் குறித்த இந்த நூலுக்காகவும் அவர் இனி தாக்கப்படலாம். இனி தேவதேவனும் கூட பிரமிளின் வாரிசு என்ற முறையிலோ, ஜெயமோகனால் பாராட்டப்படுபவர் என்ற முறையிலோ தாக்கப்படலாம். பார்ப்பனியத்திற்கு எதிரான அரசியல் என்பது தமிழகத்தில் இப்படியெல்லாம் வடிவம் பெறுகிறது. விஷ்ணுபுரம் பார்ப்பனியத்திற்கு எதிரான நாவல் என்றுதான் நான் மதிக்கிறேன். எந்த ஒரு அதிகாரமும் நாளுக்கு நாள் தன்னை வலுப்படுத்திக் கொண்டும் பெருக்கிக் கொண்டும் செல்லும் பொழுது, அடித்தளத்திலிருக்கிற மக்களை சுரண்டி தானே கனமாகி இறுதியில் தனது கனத்தால் தானே அழிகிறது என்ற நவீனகாலப்பார்வையை இந்த நாவல் உள்ளடக்கியிருக்கிறது. பார்ப்பனியம் மட்டுமல்லாமல் பவுத்தமும் இப்படி அதிகாரத்தை உள்வாங்கி பெருத்த நிலையில் வெறும் தர்க்கத்தால் மட்டும் தன்னை காப்பாற்றிக் கொள்ள இயலாமல் தானே அழிகிறது என்பதை இந்த நாவல் சொல்கிறது. தவிர முன்னைய வரலாறு எப்படி அய்தீகம்/புராணம் ஆகிறது, என்பதை கண்டுசொல்லும் முறையில் தமிழ் நாவல்களில் இதன் தனித்தன்மையை நாம் பெரிதாகப் போற்றமுடியும். ஆனால் தமிழ்ச்சூழலில் பார்ப்பனர் அல்லாதவர்களின் அரசியல் உலகளவிலான எத்தனையோ வகை இயக்கங்களிலிருந்து தன்னைத் தானே விலக்கிக் கொண்ட நிலையில் நண்பர்களுக்குள்ளும் பகைவர்களைக் கண்டுபிடித்து உண்மையான பகைவர்களோடு போராட இயலாத நிலையில் நிழல்களோடு போராடி தன் இருப்பை மெய்பித்துக் கொண்டிருக்கிறது.

தமிழில் எழுதும் பிற மொழி எழுத்தாளர்கள் என்று வாசந்தி எழுதிய பிறகு, திலிப்குமாரையும், சுப்ரபாரதிமணியனையும் வம்பிற்கு இழுத்தனர் சில நண்பர்கள். இப்பொழுது செந்தூரம் செகதீசையும், ஜெயமோகனோடு சேர்த்துத் தாக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்கள் தமிழோடு வாழ்கிறவர்கள் தமிழின் ஆக்கத்திறன்களை இவர்கள் மேம்படுத்துகிறார்கள். தமிழர் நலன்களுக்கு எதிரான அந்நிய சக்திகளோடு இவர்கள் இல்லை. பெரியார் இயக்கத்தோடும் தன் வாழ்வை இணைத்துக் கொண்ட இராமகிருஷ்ணனையும் தாக்குவதுகூட இத்தகைய அரசியல் தான். தமிழ்த்தேசியத்திற்கு எதிரான இயக்கத்தில் இவர்களை இனம் காண முடியாது. தமிழர் நலன்களுக்கெதிரான வெட்டிச் சண்டைகளில் இறங்குவன்மூலம் நம்மை நாமே அழித்துக்கொள்ள நேரிடும். தமிழ் என்று சொல்லி தமிழை அழிக்கும் சக்திகள் செயற்படும் சூழலில் தான் நாம் வாழ நேர்ந்திருக்கிறது. பெரியாரியத்தையும் இப்படி குறுக்கிக் கொண்டே போவதன் மூலம் தமிழர்நலன்களை மேம்படுத்தவும் முடியாது. நண்பர்களுக்கு பணிவோடு இந்த வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



## பேராசிரியர் நஞ்சுண்ட சாமியோடு நமக்கென்ன உறவு?

மான்சாண்டோ மலட்டு விதைகளுக்கு எதிராக தமிழர்களின் உணர்வைத் திரட்டும் நோக்கத்தோடு பேரா. நஞ்சுண்டசாமி அவர்களை தமிழகத்திற்கு சில இயக்கங்கள் வரவழைத்தன. அவருக்கு எதிரான கலகக் குரல் மதுரையில் எழுந்தது குறித்து தமிழ் ஆர்வலர்கள் அறிவர். கார்க்கில் முதலிய அன்னிய நிறுவனங்களை வெளியேற்றுவதில் கர்நாடக உழவர்களை திரட்டிய அவரது முயற்சி முதலியவற்றை நாம் பாராட்டுகிறோம். காவிரி நீர்ச்சிக்கலில் தமிழர்நலன் குறித்து இவர் முழு அளவில் எதிர்நிலை எடுக்கிறார்.

கர்நாடகத்திலிருந்து தமிழர்களை அடித்த துரத்தும் போக்கிரிகளுக்கு ஆதரவாக இவர் செயற்பட்டார். இவர் பேராசிரியர் கற்றறிந்த மேதை. 205 டி.எம்.சி. என்பது ஒரு நூற்றாண்டளவில் மிகக் குறைந்த பத்தாண்டுகளில் கிடைத்த தண்ணீரின் சராசரி அளவு. நடுவர் மன்றத்தின் இந்தத் தீர்ப்பைக் கூட கர்நாடக அரசு அலட்சியம் செய்கிறது. இந்தியாவில் இருக்கும் வரை நடுவர் மன்றத்தையோ உச்சநீதி மன்றத்தையோ ஒதுக்கி செயல்படுவது பேரா. நஞ்சுண்டசாமி போன்ற அறிஞருக்கு அழகாகாது. நெருக்கடிச் சூழலில் இவர் நடுவுநிலைமையோடு செயற்பட்டிருக்கவேண்டும். மான்சாண்டோவா? காவிரியா? எது நமக்கு பெருஞ்சிக்கல்? என்ற விவாதம் இப்பொழுது தேவையில்லை. உலகளவிலான உழவர் மாநாடு ஒன்றிற்கு பேராசிரியர் ஏற்பாடு செய்வதை வரவேற்கிறோம். எனினும் காவிரியில் தமிழர் நலன்களுக்கு முழு அளவில் எதிராகச் செயல்படும் நஞ்சுண்டசாமியை தமிழ் உணர்வாளர்கள் வரவேற்க முடியாது.

## திசை திரும்ப வைக்கும் திருப்பூர் புதிய மேம்பாட்டுத் திட்டம்?

ரொம்ப நாட்கள் இல்லை. இன்னும் இரண்டே இரண்டு வருடங்கள். கிபி. 2001ல் கழிவு நீருக்கு வரி கட்டும் இந்தியாவின் ஒரே நகரமாக திருப்பூர் விளங்கப் போகிறது. சாலை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி என சகல அடிப்படை வசதிகளெல்லாம் ஒரு புது நிறுவனத்தின் பொறுப்புக்கு விடப்பட்டு, அதற்கு அந்நிறுவனம் நிர்ணயிக்கும் வரியை 30 ஆண்டுகளுக்கு வசூலித்து செலுத்தும் சேவகத்தை நகராட்சி நிர்வாகம் செய்யப் போகிறது.

ஒரு மிகப்பெரிய மாதிரி நகரம், அதுசார்ந்து தொழில்பேட்டை, பெரும் மின்சார சேமிப்பு நிலையங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், நகர் முழுக்க பாதாளச் சாக்கடை, 'வேண்டாம், வேண்டாம்' எனச் சொல்லுகின்ற அளவு பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்பட்டு, மக்களும் மக்கள் சார்ந்திருக்கும் பனியன், சாயத் தொழில்களும் செழிக்கப் போகின்றன. பவானி நீர் வருகிற வழியெங்கும் நூற்றுக் கணக்கான கிராமங்கள் குடிநீர் வசதியும், பாசன வசதியும் பெறப் போகின்றன. 1400 கோடி ரூபாய் திட்டம், இந்தியாவில் எந்த ஒரு நகருக்கும் இல்லாத ஒரு சுகபோகம் ... என்றெல்லாம்

படிப்பகம்

www.padippakam.com



திருப்பூர் மக்களை ஒரு சொர்க்கபுரிமாய வலைக்குள் பின்னி சிக்கி வைத்திருக்கிறது அரசு. இதுதான் திருப்பூர் புதிய மேம்பாட்டுத் திட்டம்.

1990ல் அன்றைய அரசால் உருவாக்கப்பட்ட திட்டம். முழுக்க முழுக்க அரசே செய்வதாக திட்டமிட்ட செயல்பாடு. இப்போது வணிக ரீதியில் தள்ளப்பட்டிருப்பதுதான் வேதனை. அடிப்படையிலேயே குண்டும் குழியுமான, சமப்படுத்தப்படாத நெரிசல் மிகுந்த சாலைகள் உள்ள நகரம் திருப்பூர். சூழல்கேட்டில் மூச்சு முட்டி நிற்கும் திருப்பூர். அண்மைக் காலங்களில் அரசுக்கு ஈட்டித்தந்த சில ஆயிரங் கோடி ரூபாய்கள் – இதற்காக மேற்சொன்னபடி பொது நிறுவனம் உருவாக்கப்பட உள்ளது. இது 'புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்' (New Tiruppur Area Development Corporation Ltd. "NTADCL") (தமிழ்நாடு உட்கட்டுமான மேம்பாட்டுக் கழகம்) (TEA), உட்கட்டுமான குத்தகை மற்றும் நிதிச் சேவை நிறுவனங்கள் (ILFS) ஆகியவற்றை உள்ளடக்கிய இயக்குநர் குழுக்கள் இதனை வழிநடத்த உள்ளன. இதில் அரசு சார்பில் அதிகாரிகள் குழு மட்டுமே மக்கள் சார்பில் யாரும் இல்லை.

இந்த நிறுவனம் வரையறுத்துள்ள திட்டப்படி ஆரம்பத்தில் குடிநீர் 1000 லிட்டருக்கு 5 ரூபாயாகவும், தொழிற்சாலைக்கு 45/– ரூபாயாகவும் இருந்து, திட்ட முடிவில் கட்டணம் 10 மடங்கு உயருகிறது. அதாவது குடும்பத்திற்கு மாதம் 150/– ரூபாயில் ஆரம்பிக்கும் குடிநீருக்கான செலவு 30 ஆண்டுகளில் 1500/– ரூபாய்க்கு தள்ளப்படும். அண்மையில் Tata Consulting நிறுவனம் ஓர் ஆய்வு செய்ததில், சாயப்பட்டறையில் 300 கிலோ கொண்ட பின்னலாடையை சலவை செய்து சாயம் ஏற்ற 47,000 லிட் நீர் தேவைப்படும். அதன்படி கணக்கிட்டால் ஒரு கிலோ அளவு கொண்ட ஒரு பனியன் T சர்ட்டுக்கு தண்ணீர் செலவு மட்டும் 5.50 ரூபாயில் துவங்கி, திட்ட முடிவில் 57.96 ரூபாயாக உயரும். அப்படிப் பார்த்தால் அப்போதைய T சர்ட்டின் விலை ஆயிரம் ரூபாயை தாண்டி விடக் கூடும். அப்போதைய வாங்கும் சக்தி அப்படி அமையுமா என்பதை இப்போது திட்டமிட முடியுமா? ஆனால் திட்டமிட்டிருக்கிறார்களே.

கடந்த காலங்களில் மிக அதிகப்படியான அன்னியச் செலாவணி ஈட்டித் தந்த திருப்பூர் நகரம் இப்போது இருக்கும் நிலை முற்றிலும் மாறுபாடானது. பெரும்பாலான ஏற்றுமதி ரகங்கள் சீனா, தைவான் மற்றும் பல்வேறு நாடுகளுக்கு மலிந்த விலையில் ஆணைகள் சென்று சேர்ந்த நிலையில் கடுமையான உலகந்தழுவிய தொழில்போட்டியில் சிக்கித் தவிக்கிறது நகரம். இதில் இன்னும் 30 வருடங்கள் கழித்து எப்படியிருக்கும்? எல்லாமே 'பாஸிட்டிவ்' சிந்தனையின் விளைவு 30 வருடங்களில் ஒரு நகரத்தின் தனி நபர் வருமானம் இவ்வளவு இருக்கும். இதற்கு இவ்வளவு வரி விதிக்கலாம், அந்தச் சுமை மக்களுக்குச் சுமையாகவே இராது என்பதெல்லாம் ஒரு பலகீனமான வாதமேயொழிய உருப்படியானதாகக் கொள்ள முடியாது.

இந்தத் திட்ட முதலீட்டில் பங்குதாரராக இருக்கும் தமிழக அரசு தனது முதலீடாக ரூ. 100 கோடியை வைக்கிறது. அதற்குப் பணம் வேண்டுமே. அதற்கெனத் திருப்பூர் தொகுதி பஞ்சாயத்துகளான ஈட்டி வீரம்பாளையம், பொம்மனாம்பாளையம் கிராமங்களில் உள்ள விவசாய நிலங்கள் 375 ஏக்கரை கையகப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட அடிமாட்டு விலையை நிர்ணயம் செய்து, நிலச் சொந்தக்காரர்களை அப்புறப்படுத்தி, "ஒரு மாதிரி

படிப்பகம்

www.padippakam.com



நகரத்தை" உருவாக்கி விற்பனை செய்து அதில் ஈட்டும் தொகையை இதில் இட துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுற்றுப்புறங்களில் ஏக்கருக்கு 10 லட்சம், 15 லட்சம் ரூபாய் என்று இன்று விலை பேசப்படுகிறது. நிலம் இழக்கும் விவசாயிகளுக்கு அரசு தரக்கூடிய தொகை 20,000 – 30,000 ரூபாய் மட்டும். தனியொரு நிறுவனம் லாபம் ஈட்டும் திட்டத்திற்கு இவர்கள் என்ன பலிகிடாக்களா? என்பது பலரது கேள்வி.

இந்நிறுவனத்தின் கணக்குப்படி 30வது வருடத்தில் வரி வசூல் மூலம் ஈட்டும் தொகை 13,538.3 கோடி ரூபாய். பராமரிப்பு செலவு மற்றும் முதலீட்டிற்கான வட்டி எனக் கழித்தாலும் நிகர லாபம் 4134 கோடி ரூபாயாக இருக்கும். எப்படி மக்களுக்கு சேவையாற்றிட முடியும்? தொழில் நசிவு, வேலையில்லா நிலை ஏற்படும் சூழலில் அதிகப்படி கட்டண நிமித்தம் குடிநீரை தொழிலுக்கு கொண்டு போகாது என என்ன நிச்சயம்? இந்த நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிப் போகிற மாதிரிதான் இதன் மொத்த விதிகளும் உள்ளன. திருப்பூர் நகராட்சி வங்கியில் இந்நிறுவனத்தின் பெயரில் LC open செய்து கொடுத்து விட வேண்டும், வரி வசூலித்துக் கட்டும் பொறுப்பு அதனுடையதாக இருக்கும். சிக்கலான தருணங்களில் எந்த நிலையிலும், அரசு இந்நிறுவனத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இந்த நிலைமை பல சிக்கல்களுக்கே வழி செய்யும்.

உதாரணத்திற்கு ஓரிரு வாரங்கள் குடிநீரே வரவில்லையென்றால் நிலைமை எப்படியிருக்கும்? சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கவில்லையென்றால் எப்படியிருக்கும். கோவையில் ஒரு பாலத்தை தனியார் ஒப்பந்தத்திற்கு ஆட்படுத்தி வரி வசூலிப்பதற்கே அவ்வளவு சிக்கல்களென்றால் அடிப்படை மக்கள் பிரச்சனை என்று வரும்போது – இத்திட்டம் செயல்படும்போது நிலைமை என்னவாகும்? பொதுவாக இந்தத் திட்டத்தை இப்பொழுது மக்கள் எதிர்க்கவில்லை. ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து லாப நோக்குடன் செயல்படுவதைத்தான் எதிர்க்கிறார்கள்.

திருப்பூர் சாயப்பட்டறை, பனியன் அதிபர்கள் ஒருமித்து ஆதரவுக்கரம் நீட்டி வரவேற்கும் இத்திட்டத்தை இத்தொகுதியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் ஆளும் கட்சியும் ஆதரிப்பதே பலருக்கும் புரியாததாக இருக்கிறது. அனைத்துக் கட்சிகளும், சிந்தனையாளர்கள், சூழலியலார்களும் எதிர்க்கும் நிலையில், 'திட்டம் வரட்டும், மற்றவை நடப்பது போல் நடக்கும்' என்னும் சிலரின் போக்கு ஆபத்துக் அறிகுறியே!

ஒரு கவர்ச்சிச் சாயம் பூசப்படும் திட்டத்திற்கு இரண்டு கருத்துக்கள் இருக்கிற வரை மக்களிடம் அது வீரியம் கொள்ளாது என்பதே உண்மை. அடிப்படை வசதிகளை தனி ஒரு நிறுவனத்திற்கு அளிப்பதனால் மக்களிடம் ஏற்படும் பின் விளைவுகள் 2001–க்குப் பிறகு தெரிய வரும். மக்கள் எழுச்சியுறும்போது அநேகமாக தமிழகத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும் இது மாதிரி திட்டங்கள் அரசால் வடிவமைக்கப்பட்டு, வேலையும் துரிதப்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது. அப்பொழுது நாம் போய்ச் சேருவது சொர்க்கமாக அல்லது நரகமா என்பது தெரிந்து விடும்.

– ரோகிணி

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் இயக்கங்கள்

# மகாத்மாவின் அறப்போரில் உயிரீந்த தில்லையாடி வள்ளியம்மை நூற்றாண்டு விழா

- ✳ தென்னாப்பிரிக்க இந்தியர்களின் உரிமை காக்க உயிர் ஈந்தவர்.
- ✳ இந்தியத் திருமணங்கள் செல்லாது என்ற சட்டம் எதிர்த்துச் சிறை புகுந்தவர்.
- ✳ சிறைக் கொடுமையால் நோயுற்று பதினாறு வயதிலே மரணமடைந்தவர்.
- ✳ வள்ளியம்மை, நாகப்பன் இருவரின் நினைவுச் சின்னத்தை நிறுவி "இந்தியாவின் புனிதமகள்" என மகாத்மா போற்றிய தமிழ்ப்பெண்.
- ✳ "தனது தியாகத்தால் ஓர் ஆலயத்தையே நிறுவிக் கொண்டாள்" என காந்தி புகழ்ந்தார்.
- ✳ 1915ல் தமிழகம் வந்து, தில்லையாடி சென்று தமது நன்றியைப் பதிவு செய்தவர்
- ✳ நிறவெறி வெல்ல உயிரீந்த, தென்னாப்பிரிக்க காந்தி நெல்சேன் மண்டேலாவின் முன்னோடியானவர் வள்ளியம்மை.
- ✳ அண்ணலுக்காக உயிரீந்த வள்ளியம்மை நினைவைப் போற்றித் தபால்தலை வெளியிடக்கோருவோம்.
- ✳ பெண்ணினத்தின் பெருமைக்குச் சூட்டும் தமிழ் மகளின் புகழ் பரப்பத் தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியா முழுமையும் தென்னாப்பிரிக்காவிலும் விழா எடுக்க முயல்வோம்.

– மருத்துவர் ஜீவா வெளியிட்ட அறிக்கையிலிருந்து

# இயற்கை மருத்துவப் பட்டயமளிப்பு விழா

திருவள்ளுவராண்டு 2030, சுறவ மாதம் 29 ஆம் நாள் (12.2.99) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பல்லடம் தாய்த் தமிழ்த் தொடக்கப்பள்ளியில் யோகாசன, இயற்கை மருத்துவப் பட்டயமளிப்பு விழா நடைபெற்றது. சங்கத் தலைவர் ந. முத்துக்குமரன் தலைமை ஏற்றார். சங்கச் செயலாளர் கு.மெய்ஞானமூர்த்தி வரவேற்புரையாற்றினார். செயற்கை உரங்கள் , பூச்சிமருந்துகளின் பயன்பாட்டினால் மாசுபட்டுள்ள உணவுகளும், தொழில், போக்குவரத்து மாசுபாடுகளால் மனிதன் எளிதே நோய்ப்படும் நிலையில், ஏழை, எளிய மக்கள் அணுக முடியாத அதிகச் செலவு மதிப்புள்ள அல்லோபதி மருத்துவ முறைக்கு ஈடாக மாற்று மருத்துவ முறைகளின் தேவையைத் தம் வரவேற்புரையில் சுட்டினார். யோகாசன இயற்கை மருத்துவப் பட்டய (டிப்ளமா)ச் சான்றிதழ்களைத் மரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வழங்கினார்.

பட்டயமளிப்பு விழா உரையைத் தமிழ்நாடு பகுத்தறிவாளர் கழகத் துணைத் தலைவர் திரு. கு.வெ.கி.ஆசான் அவர்கள் நிகழ்த்தினார். அவர்தம் உரையில், அனுபவ வைத்தியமாக உள்ள சித்த மருத்துவம் அறிவியல் முறையாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய தேவையை உணர்த்தினார். யோகாசனம் உடலின் நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டைத் தூண்டுவதையும் காந்தியடிகளின் வாழ்க்கையில் இயற்கை மருத்துவத்தைக் கடைப்பிடித்த துணிவினையும் குறிப்பிட்டார்.

பட்டயப் பயிற்சி ஆசிரியர்கள் திரு. குப்பு அவநாசிலிங்கமும் திருவாட்டி சொர்ணலதா அவனாசிலிங்கமும் இளைய மருத்துவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளை வலியுறுத்தினர்.

பேராசிரியர் டாக்டர் சேக் இசுமாயில் ஊசித் துளை மருத்துவ (அக்குபஞ்சர்) அறிமுக உரையாற்றினார். பட்டயம் பெற்ற 49 பேரில் 11 பேர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தித்தொகுப்பு : சூ.நா. தமிழ்நெஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com



# புதிய தமிழ் இலக்கியம்

## கவலை
## [எங்கள் கதை]

ஆசிரியர் : அழகிய நாயகி

(ஒரு நூற்றாண்டுக் குடும்பத்தின் கதையை அடிக்கடி நினைவு கூர்ந்த தன் தாயாரிடம் எழுத்தில் இந்தக் கதைகளை வடித்து கொடுங்கள் என்று வற்புறுத்தி கேட்டுக் கொண்டார் நாவலாசிரியர் பொன்னீலன் அவர்கள். தாயாரும் ஏராளமாக எழுதினார். இது தலைமுறைகளின் குடும்பக்கதை மட்டும் இல்லை. இந்தக் கதை வழியே நாட்டார் வரலாற்றை காணமுடியும் என்று கண்டு கொண்ட பாளையங்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் துறையை நிறுவிய அருள் திரு. ஜெயபதி அவர்கள் இதை வெளியிட்டு இருக்கிறார். நாட்டார் வழக்காற்றியல் நாவல் என்றும் இதை நாம் வாசிக்கமுடியும்.)

– ஞானி

ஒரு மனிதனின் வாழ்வில் 'புரிதல்' என்பது குடும்பத்திலிருந்துதான் தொடங்குகிறது என்ற பேராசிரியர் அ.சிவ. சுப்பிரமணியம் அவர்கள் கூற்றுக்கேற்ப, குடும்பத்தின் பல்வேறு பரிணாமங்களை இந்நூல் விவரிக்கிறது. கூட்டுக் குடும்பம், தனிமனித உறவுகள், கலாச்சாரம், வாழ்க்கையியல் நடைமுறைகள், சமகால வரலாறு ஆகிய அனைத்தும் இந்த நூலில் பதிவாகியுள்ளன.

எனக்கு எழுத்தனுபவம் கிடையாது என்று கூறிக் கொள்ளும் ஆசிரியர், மிகத் தேர்ந்த எழுத்தாளருக்கான அனைத்து அம்சங்களும் பெற்று விளங்குகிறார். தன்னுடைய மூதாதையர் சிவன் தொடங்கி காளி வழியாக வந்த வரலாற்றைப் படிக்கும் போது, ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும், அதன் குடும்ப வரலாற்றைப் பற்றியும் ஆதி முதல் அந்தம் வரை நுட்பமான விபரங்களைத் தொகுத்து ஒரு தொடர்ச்சி கொடுத்திருப்பதையும் படிக்கும் போதும் எனக்கு ஏற்பட்ட ஆச்சர்யத்தை எப்படிக் கூறுவது என்று தெரியவில்லை.

ஒரு கிராமம், குடும்பம், அந்தக் காலத்தில் தன்னுடைய சுயமான கலாச்சார தொடர்ச்சியில் தற்சார்புடையதாக அமைந்திருந்தது என்பது நன்கு வெளியிடப் பட்டுள்ளது. முக்கியமாக மருத்துவமுறைகள். அதன் தொடர்ச்சியை இழந்த நம் மக்கள் இன்று படும் அவதி எப்பேற்பட்ட இழப்பு; படித்த சூழ்நிலை, கிறிஸ்தவர், முஸ்லீம் என அனைத்து மதத்தினரும் ஒத்திசைந்து வாழ்ந்த வாழ்க்கை எல்லாம் நம் கண்முன் சித்திரமாகத் தோன்றும்படி திறம்பட எழுதியுள்ளார்.

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் தன் பெண்ணை ஏழாம் வகுப்புவரை படிக்க வைத்த அவருடைய அப்பாவை மிகவும் மதிப்போடு நினைவு கூறுகிறார். பலமொழி நூல்களை கற்றது, புத்தகங்கள் வாங்கிப் படிப்பது, புராண நூல்களைப் படித்தது, கடினமான மறைமுக மொழியில் இருக்கும் மருத்துவ முறைகளை மனப்பாடம் செய்வது, புகுந்த வீட்டில் இந்தி கற்றது . . . என்று செய்திகள் தொடரும் போது இவர் நம் சராசரி தாய்மார்களை விட்டு மிகவும் வித்தியாசப்பட்டு தனித்தன்மையுடன் திகழ்கிறார். இந்தத் தனித்தன்மைதான் இவற்றை ஒரு தேர்ந்த எழுத்தாளராக நம் முன் நிறுத்துகிறது.

கட்டநாடான் வீட்டு நிகழ்வு, பெண்களின் அவல நிலையை அப்பட்டமாக காட்டும் சித்திரம். நெகிழாதோர் இருக்க முடியாது. "மைனா"வின் கதை ஒரு தனி

படிப்பகம்

www.padippakam.com



அத்தியாயமாகத் தரப்பட்டுள்ளது. தன்னைப் பற்றிய படிமமாக, மிகத் தேர்ந்த கதாசிரியராக தன்னை நிலைநாட்டிக் கொள்கிறார். தன்னுடைய சித்தியைப் பெண் பார்த்து, திருமணம் முடித்து வந்த விபரம் பிறகு அவருடைய நடவடிக்கை எல்லாம் மிகச்சிறந்த வரலாற்றுப் பதிவுகள். பல சந்தர்ப்பங்கள் இவரால் கலந்து கொள்ள முடியாததாக இருந்த போதிலும், நடந்தவைகளை நேரடி உரையாடலாகக் கொடுத்திருக்கிறார். கேட்டவற்றை வைத்தே, கோர்ட்டில் நடந்தவற்றையும், சம்பந்தம் பேசச் சென்ற இடத்தில் நடந்தவற்றையும் பதிவு செய்துள்ளார். அவருடைய திறமை இங்கேதான் மிகவும் பளிச்சிடுகிறது.

நிறைய பழமொழிகள், சொந்தக் கவிதைகள், சிலவற்றை சொந்தச் சரக்கா, பழமொழியா என்று கண்டறிய முடியாதபடி இணைத்து எழுதியிருக்கிறார். "கொண்டவன் தோழமையானால் பெண்டென வந்தவள் ஏழையாவாள்" "இனிய பிறவியையும் இன்புள்ள தாயாரையும் கடுகவே மறக்க வைத்தாள் என் கட்டழகி பெண்டாட்டி" ... இப்படிச் சில.

'கெட்டகுடி வாழும். செத்த குடி வாழாது', என்று ஒரு புதிய விளக்கம்.

'ஆழ உழுதாலும் ஆடு வைத்துப் பார்த்தாலும்
தாழ உழுதாலும் தலைவிதி தப்பாது" என்று விதி பற்றிய கோட்பாடு பல இடங்களில் மிக ஆழமாக, பரவலாக கூறப்பட்டுள்ளது.

இவர் வாழ்ந்த சமூகத்திலிருந்து மிகவும் தனிமைப்படுகிறார். கலாச்சார ரீதியாக தன் புகுந்த வீட்டில் ஒன்றுபட முடியவில்லை. இதனைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் போது, அவர் காலத்து வாழ்க்கைப் பதிவு என்பதற்குமேல், சில ஆய்வுக்குரிய ஆழமான உண்மைகள் இருப்பது போலத் தோன்றுகிறது.

இவர்கள் வணங்கும் அழகிய நாயகி, பொன்னம்பலநாதன் இந்தப் பகுதிக்கான தெய்வங்கள் அல்ல. மேலும் இந்தப் பகுதிக்கான முத்தாரம்மன் வழிபாடு இந்தக் கிராமத்தாரிடம் காணப்படவில்லை.

"மாசாத்தான் தேடும் மலையளவும், கடலளவும்
அத்தனையும் அழிப்பதற்கு அவன் பொறந்தான் கோவலன்
என்று கிழவிமார் படுவார்கள்" என்று ஒரு குறிப்புவருகிறது.

'பிராமணப் பிள்ளை நண்டு பிடிக்கப் பழகியதுபோல், நாடான் மகளாகி நானும் கோலங்கள் போடவும் சமையல் செய்யவும் பழகிக் கொண்டிருந்தேன்" என்று குறிப்பிடுகிறார். 'மகளாகி' என்று குறிப்பிடுவது ஆய்வுக்குரியதாகத் தோன்றுகிறது.

கலாச்சார ரீதியாக ஒவ்வாத சூழலில் புகுந்து தனக்கென எந்த அந்தஸ்தும் கிட்டாமல், வரிசையாகக் குழந்தைகளை இழந்து சிறகொடிந்த பறவையாகச் சிறைப்பட்டு கவலையில் மூழ்கியதாக தன் வாழ்வை விளக்கும் ஆசிரியர், தன் கணவன், பொட்டலில் பள்ளிக்கூடம் ஏற்பட, பட்ட சிரமங்களுக்குத் தக்க அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பதையும் குறிப்பிடுகிறார்.

தன் சொத்தெல்லாம் இழந்து வருகிற போது தன் குழந்தைகளுக்காக இந்த அம்மா கவலைப்படுகிறார். சொத்து அனைத்தும் இழந்தாலும் உள்ள அனைத்து குழந்தைகளும் கல்வி என்கிற அழியாச் சொத்தை அடையவேண்டும் என்று அவருடைய கணவன் போராடுகிறார். ஊரிலுள்ள குழந்தைகளை தன் குழந்தைகளாக நினைத்துத் தன் சொத்தையும் உயிரையும் இழக்கத் துணிந்த அந்தக் கணவரைப் பற்றி ஒரு உண்மையை இங்கு குறிப்பிடுவதுதான் அவருடைய தியாகத்திற்கு ஒரு சிறு மரியாதை தருவதாக அமையும் என்று நினைக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



பள்ளிக்கூட நிலத்திற்கு பூமி வாங்கிச் சேர்த்தபோது, ஒரு சிறு பகுதியைச் சேர்த்து வாங்குவதற்கு இணையாகத் தன் குடும்பத்து விலையுயர்ந்த பூமியைத் தரவேண்டி வந்தது. குடும்பத்தார் இசையவில்லை. அதற்காக 22 நாட்கள் தண்ணீர்கூடக் குடிக்காமல் உண்ணாவிரதம் இருந்து இறுதியில் வென்றார். அவர்தான் "உனக்காக நான் எதையும் வைத்துவிட்டுப் போகவில்லை. ஆனால் உன்னை விட்டுச் செல்கிறேன்", என்று இறுதி வார்த்தை கூறி மறைந்த திரு. பொன்னீலவடிவு. நமக்கு பொன்னீலன் என்ற பொது நலவாதியைத் தந்த பொன்னீலனின் தந்தை.

ஆசிரியரின் கணவர் பற்றி பின்னுரையில் கூறியிருப்பவையும் சேர்த்து, கிட்டத்தட்ட, இந்த நூற்றாண்டின், நம் வாழ்க்கை எந்தவிதக் கலப்புமின்றி, நேரடி வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டு நமக்குக் கிடைத்திருக்கிறது.

தாய் . . . நம்முடைய உயிர், வாழ்க்கை, கலாச்சாரம் . . . எல்லாமே. அங்கு தொடங்கும் புரிதலில் இருந்து, குடும்பம் வழியாக சமூகத்தை அடையும் ஒருவரால்தான், தனக்காகவும், சமூகத்திற்காகவும் பயனுள்ள மனிதனாகத் தன்னைக் கொடுக்க முடியும். அந்த வகையிலும் ஒரு புதிய பரிமாணத்தை இந்நூல் தமிழ்ச் சமூகத்துக்கு வழங்குகிறது.

தன் தாய்க்கு ஒவ்வொரு குழந்தையும் மிகச் சிறந்ததாக ஏதாவது செய்ய முயற்சிப்பதுண்டு. தோல்விதான் மிஞ்சும். இந்த நூலை வெளியிட்டு தன் தாய்க்கு காலத்தை வெல்லும் கோயிலை எழுப்பும் பொன்னீலன், வெற்றி பெற்றிருக்கிறார் என்றுதான் நினைக்கிறேன்.

குழந்தைகள் வரிசையாக இறந்து போவதை எழுதும் போது, இந்தத் தாய் மனம் படும் வேதனை நம்மையும் நிலைகுலையச் செய்யும். தானும் இவர்களோடு இந்த வேதனையால் இறந்திருக்கவேண்டும், "இவற்றையெல்லாம் எழுத விதிக்கப்பட்ட நான் எப்படிச் சாவேன்" என்று எழுதியுள்ளார்.

நம் "தாய்க்கு" மரணமில்லை.

புதைந்து விடாமல் நம் கைக்குக் கிடைத்துவிட்ட காலப்பெட்டகம். வகைப்படுத்திவிட முடியாத வரலாற்றுக் காவியம். தமிழிலக்கியத்தில் தடம் பதிக்கும் முன்னோடி.

குறைந்தது மூன்று முறையாவது படித்து, தேர்ந்த ஆய்வு அறிஞர்களிடம் விவாதித்தால்தான் இதற்குள் இருக்கும் வாழ்க்கை உண்மை ஓரளவு புலப்படும். பல்வேறு விதமான தனித்தன்மையைத் தனக்குள் தேக்கி இந்நூல் வெளி வந்திருக்கிறது.

**இரா. இளங்கோவன்**
தஞ்சை

# சாயத்திரை - நாவல்

மற்றும் சிலர், 'சுடுமணல்' ஆகிய நாவல்களைத் தந்த சுப்ரபாரதி மணியன் த்மிழுக்கு அடுத்ததாக வார்த்தெடுத்துள்ள நாவல் 'சாயத்திரை.'

எண்ணிறைந்த பிம்பங்கள், நிறைய நகர்வுகள், (மரங்கள், செடிகள், புல்தரைகள், வறட்சி, இறுக்கம், நிறைய மாற்றங்களை உள்ளடக்கிய, நிலம், நிறம் மாறி நகரும் நீர் அவற்றுள் நிறைய மனிதர்கள்) எல்லாமே மெல்லிய நீர்த்திரை போல். பக்தவத்சலம், ரோசா, நாகன், சாமியப்பன், ஜோதிமணி, செட்டியார், கமலம், வேலுச்சாமி, சௌந்திரி என ஏராள உயிர்த் துடிப்புகள். அவை விடும் சுவாசப் பெருமூச்சு. அவற்றில் தவழும் அச்சம், கோபம், தாபம், குதர்க்கம், விரகம். சலக பரிமாணத்திற்கும் அழுத்தமாய் குறுக்கும் நெடுக்குமாய் கோடுகள் கிழிக்கிறது சாயத்திரை. அத்திரை கடினப்பட்டும் கிடக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



எந்த நிலையிலும் எந்த இடத்திலும் மானுட முகங்கள் சரியாகத் தெரியவில்லை. எல்லாமே சாய வரிக் கோடுகள். சொக்க வைக்கும் நடை. சொருக வைக்கும் வார்த்தைகள். சமூக அக்கறை. அதன் விளைவாய் எழும் சமூகக் கோபம் அனைத்தும பாத்திரங்களின்பால் யதார்த்த ரீதியில் மென்மையாய் தவழ்ச்சியுற வைத்து, படிப்பவர் நெஞ்சைக் கடுமையாக சுட வைக்கின்றன.

"நா துப்பறதுக்குன்னு இருக்கறவங்க மூஞ்சியிலெல்லாம் துப்பிட்டபிறகு மறுபடியும் யோசிக்கணும். காறிக்காறித் துப்பணும். எத்தனையோ பேர் இருக்காங்க. ஆனா நான் காறிக் காறித் துப்பறதுக்குன்னு இருக்கறவங்க நான் பெத்து வளர்த்த புள்ளைகதா. ரத்தம் வர்ற வரைக்கும் காறித் துப்பணும்."

படிக்கும் பொழுதே உடம்பெல்லாம் நடுங்குகிறது. கொஞ்சம் நிதானமாக இருக்கவும் தோன்றுகிறது. நிதானமாக இருந்தால் புவியே பொசுங்கிப் போய்விடும் என்கிற அவசரம் என்பதை இந்நாவல் உணர வைக்கிறது.

பாத்திரங்களின் சோகங்களும், துயரங்களும், ஆசாபாசங்களும் தொடர் இழையோட்டமாகக் கொண்டு வாசிப்பவரை ஓர் இதமான கிளுகிளு ரசனைக்கு இட்டுச் செல்லாமல் இந்த மண் மீது நிறைந்த அக்கறை கொண்டு பூமி மீது ஆதங்கம் கொண்டு பஞ்ச பூதங்களுக்கும் நாயகத் தன்மை கொடுத்து ஒரு பெரும் சூழல் பேராளிபோல் பேனா வாள் கொண்டு வீசுகிறார் சுப்ரபாரதி மணியன்.

நாவலுக்கான கதைக்கரு, அத்யாயங்களுக்கிடையிலான தொடர் ஓட்டங்கள் கூட இங்கே சாய நூலிழைகளாலேயே பின்னப்பட்டிருப்பது புத்தம் புது உத்தி. நாகனைப் படிக்கும் போது ஒரு கால கட்ட வர்ணாசிரமம் கண்முன் உருமாற்றம் கொள்கின்றன. அரைக்கால் சட்டைக் குமார் இலட்சக்கணக்கான குழந்தைத் தொழிலாளிகளின் பிரதிபலிப்பாக உலா வருகிறான். 'குஷ்டமா, காசமா' என்றே உணரப்படாத வேலுச்சாமி சாயக் கூறுகளின் திருப்பூர் மாயத் திரையின் ஓர் அங்க அடையாளம். மனைவி சௌந்தர்யாவை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துவதும், விடிந்து பார்த்தால் அவள் தூக்கில் தொங்குவதன் மூலம் நம்மை மட்டுமல்ல திருப்பூர் சாயத் தொழிற்சாலைகளை, அதன் கழிவுகளை, அதனாலுண்டான வளர்ச்சிகளை, மார்தட்டித் திரியும் செல்வந்தர்களை, முதலாளிகளை அனைவரையுமே தூக்கில் தொங்க விட்டு விடுகிறார் நாவலாசிரியர்.

பாசனத்திற்கு கட்டப்பட்ட அணை சாயத்திற்கு கட்டப்பட்டதாக மாறின நிலை முதல் இன்றைய புதிய மேம்பாட்டுத் திட்ட பூதம் வரை தன்னுள் பரிகாசத்திற்கு கொண்டு வரும் இந்நாவலை படித்து முடிக்கும்போது நமக்குள் எழுகிற கோபம், தாபம், விரக்தி எல்லாமே அந்தக் கொடூர சாயத்தின்பால் கட்டவிழ்த்துக் கொள்கிறது. திரும்பத் திரும்ப படிப்பதன் மூலம் பாத்திரங்கள் புதுப்புது பரிணாமம் கொள்கின்றன. இருந்த பாத்திரங்கள் எங்கெங்கே இறந்தன என்பதை தேடும்பொழுது அந்த இறந்த பாத்திரங்கள் நம்முன் விஸ்வரூபம் கொண்டு உயிர்த்தெழுந்து நிற்பது நிஜம். அதுதான் இப்படைப்பின் வெற்றி. படைப்பாளியின் வெற்றி. திருப்பூரை மட்டுமல்ல உலகையே பீடித்துள்ள இச்சாய நோய் (சூழல் நோய்) தன் கூட்டை உடைக்க இச் சாயத்திரை மிகப்பெரும் காரணியாய் இருக்கும்.

காவ்யா வெளியீடு – பக்கம் 214 – விலை ரூ. 50/–

– கா.சு. வேலாதயுதம்

படிப்பகம்

www.padippakam.com



## பாரதிதாசன் படைப்புகளில் அரசியல்

தமிழ்த்தேசியமென்ற அரசியலை முன்னெடுத்துச் செல்லவேண்டிய வரலாற்றுக் கடமை இன்று நம் முன் நிற்கிறது. தமிழ்த்தேசியமென்ற அரசியலின் முதல்வர்களில் ஒருவராக பாவேந்தர் பாரதிதாசன் அவர்களை மதிக்கிறோம். பாரதிதாசன் படைப்புகள் குறித்த ஆய்வுகளும் இன்று தொடர்ந்து வெளிவருகின்றன. இவ்வகை ஆய்வுகளில் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. முனைவர் பட்டத்திற்கான திருஞானமூர்த்தி அவர்களின் இந்த ஆய்வு நூல். பாரதிதாசன் படைப்புகளில் தொடக்கத்தில் இடம் பெற்றது இந்திய தேசியம், பிறகு இறுதிவரை திராவிட தேசியம், சரியாகச் சொன்னால் தமிழ்த் தேசியம், தமிழ்த்தேசியம் என்ற அரசியலில் சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் தனக்கு ஆதாரமாக கொண்ட முதலாளியத்திற்கு இடம் இருக்க முடியாது. பாரதிதாசனைப் போல பொதுவுடைமையை நேசித்த இன்னொரு கவிஞர் தமிழில் இல்லை. மார்க்சியரும் பெரியாரியரும் தமக்குள் முரண்பட்டு எதிர்த் திசைகளில் சென்றபொழுது தமிழ் மக்களின் விடுதலை தவறிக் கெட்டது. பாரதிதாசன் என்ற மையப்புள்ளியில் மார்க்சியரும் பெரியாரியரும் கைகோர்த்துக் கொள்ள முடியும். இந்த மையத்தில் தான் தமிழ்த்தேசியம் தழைக்கும். இவ்வகை பார்வைக்கான ஆதாரங்களை இந்த நூலில் திருஞானமூர்த்தி திரட்டித் தந்திருக்கிறார். தமிழ் ஆர்வலர்கள் படித்துப் பயன்பெற வேண்டிய நல்ல நூல்.

தனலட்சுமி வெளியீடு,
**1/100, தாயகம், தேனப்பர் வீதி, மேலைச்சிவபுரி – 622 403**
விலை : ரூ. 50/– பக்கங்கள் : 152

## அமெரிக்காவில் பெருங்கவிக்கோ

மெக்சிகோவில் நடைபெற்ற உலகக் கவிஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மெக்சிகோ சென்ற பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் அவர்கள் அமெரிக்காவில் மேற்கொண்ட பயண அனுபவங்களை இந்தக் கவிதை நூலில் தருகிறார். நூல் வெளியீட்டு விழாவில் சிற்பி அவர்கள் கூறியதைப் போல தமிழகத்தில் பெருங்கவிக்கோவை அறிந்த தமிழ் மக்களைக் காட்டிலும் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் இவரை அதிகம் அறிவார்கள். உலகக் கவிஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இசுரேல், துருக்கி முதலிய பல நாடுகளுக்கும் சென்று வந்த அனுபவங்களை நூல்களாக வடித்திருக்கிறார்.

தென் மாவட்டக் கிராமம் ஒன்றில் பிறந்து தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி பிறகு புலவர் முதலிய தகுதிகளைப் பெற்று அறிஞர் சஞ்சீவி அவர்களின் நெறிப்படுத்தலில் தமிழில் கவிதை, கவிஞர் இலக்கணம் குறித்து தமிழிலக்கியங்களின் வழியே முனைப்பான ஆய்வு ஒன்றைச் செய்து வெளியிட்டிருக்கிறார். தமக்கான தனிநாட்டைப் பெற போராடும் ஈழத்தமிழர்களின் துயரத்தை முதன்மைப்படுத்தி "கௌதம புத்தரின் கண்ணீர்" என்ற கவிதை நாடகத்தை படைத்திருக்கிறார். கன்னியாகுமரி தொடங்கி சென்னை வரையில் தமிழுக்கான நடைபயணத்தை மேற்கொண்ட இவர் தமிழ்நடைப்பாவை என்ற பாவைப்பாடல்களை படைத்துள்ளார். தன் வாழ்க்கை வரலாற்றை நெடுங்கவிதையாய் தந்திருக்கிறார். பாரதிதாசனின் "புரட்சிக்கவி" பாணியில் அழகான கவிதை நாடகம் ஒன்றையும் படைத்துள்ளார்.

இவை போன்ற தமிழ் நூற்கள் பெருங்கவிக்கோ அவர்களின் சாதனைகள்.

படிப்பகம்

www.padippakam.com



உலகரங்கில் தமிழுக்கு ஏற்றம் தருவதை தமக்கான தமிழ்ப்பணியாக கொண்டுள்ள சேதுராமன் அவர்கள் அமெரிக்காவில் குடிமக்களாகி வாழும் தமிழர்களின் நெஞ்சில் தமிழுணர்வை கிளறி அவர்கள் வழியே தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் ஏதாவது நல்லது செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு அமெரிக்காவில் அலைந்திருக்கிறார். சேதுராமன் அவர்கள் விமானப்பயணத்தின் போதும் மேகங்களின் அழகு சொல்லும் வெண்பாக்களை எழுதுகிறார். நயாகரா அருவியின் பேரழகை வியந்து வியந்து கவிதைகளில் கொட்டும் கவிஞர், இது சிவபெருமானின் பேரருளோ? தமிழின் பேரழகோ என்றெல்லாம் பாடுகிறார். உரைநடையில் எழுதியிருக்க வேண்டிய பயண அனுபவங்களை செய்யுளில் தருவதன் மூலம் அதிக எண்ணிக்கையில் தமிழ் மக்களுக்கு இந்த நூல் சென்றடைய முடியாது. கவிதைக்கு மட்டுமல்லாமல் உரைநடைக்கும் 'செறிவு' என்பது ஒரு அழகு. அமெரிக்காவின் ஆதிக்கத்தையும் கவிஞர் சாடுகிறார். வியட்நாமை வாழ்த்துகிறார். சிலியில் நடைபெற்ற சனநாயகப் படுகொலையைக் கண்டிக்கிறார். ஈழத் தமிழர்களின் விடுதலையை ஆவலோடு எதிர்பார்க்கிறார். இவரது தமிழ் வீரத்தையும் துணிவையும் புலப்படுத்துகிற இவரது அடர்த்தியான மீசையை பாராட்டாதவர் இல்லை. உலகளவில் தமிழ் வளர்க்கும் பெருங்கவிக்கோ அவர்களை நாமும் பாராட்டுகிறோம்.

## 12 இதழ்களில் ஒரு சாதனை

சூலூரிலிருந்து வெளிவருகிற ஒரு கலை, இலக்கிய, ஆன்மீக, அரசியல் இதழ் கலைப்பித்தன். இதழ் ஆசிரியர் திரு.கலைப்பித்தன். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நாடகத் துறையிலும் திரைப்படத் தயாரிப்பிலும் ஈடுபட்டிருந்த கலைப்பித்தன் அவர்கள் இப்பொழுது இதழியல் துறையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார். தேசியத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவர். காந்தியடிகளை சிலர் குறைத்துப் பேசுவதை கவலையோடு கண்டிக்கிறார். விடுதலைப்போரில் ஈடுபட்டுத் தன்னை தேசியத் தலைவராகவும் ஆன்மீக தலைவராகவும் நிலை நிறுத்திக் கொண்ட முத்துராமலிங்கத் தேவர் அவர்களை தற்பொழுது சாதித் தலைவராக குறைப்பவரைச் சாடுகிறார் கலைப்பித்தன். சமயப் பணிகளோடு சமூகப் பணிகளையும் கூடுதலாக மேற்கொண்டிருக்கிற சிவலிங்கேசுவரர் என்ற இளம் வீரத்துறவியாரை விரிவாக நமக்கு அறிமுகப்படுத்துகிறார். தமிழகம் முழுவதும் ஐம்பதிற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கிய பெருஞ்செல்வர் கே.வி.குப்புசாமி அவர்களை இதழ்தோறும் பாராட்டுகிறார். கல்வித்துறையில் துணை இயக்குநராக பணி புரிந்து ஓய்வு பெற்ற நிலையிலும் கல்வி வளர்ச்சிக்காக ஓயாமல் கொடுக்கும் திரு. எஸ்.ஏ.சுப்ரமணியம் அவர்களை மனமாரப் பாராட்டுகிறார். தேசவிடுதலை, பகுத்தறிவு இயக்கம், மார்க்ஸ் இயக்கம், தமிழியக்கம் முதலிய அனைத்து இயக்கங்களிலும் தன் முத்திரையைப் பதிவு செய்திருக்கிறது சூலூர் என்ற இந்தக் குறு நகரம். கலைத்துறையிலும் இதன் சாதனைக்கு கலைப்பித்தன் போன்றவர்கள் சான்றாகத் திகழ்கின்றனர். சூலூரின் அரசியல் மற்றும் பொருளியல் வாழ்வின் வளர்ச்சியிலிருந்து சான்றோர்கள் கருப்பண்ணத்தேவர், எஸ்.ஆர்.சுப்ரமணியம், திருவேங்கடசாமி முதலியவர்களைப் பிரித்துப் பேச முடியாது. இவர்களின் ஆக்கப் பணிகளை இன்றும் தொடரும் பெருமக்களை கலைப்பித்தன் பதிவு செய்கிறார். பல துறைகளில் படர்ந்து செல்லும் தன் வாழ்வியல் நெறிகளை விரிவாகப் பதிவு செய்கிறார் கலைப்பித்தன். தான் தயாரித்த 'சுதந்திரபாரதி' என்ற, தேசிய உணர்வு சார்ந்த திரைப்படம் வெளிவராது இருப்பதற்கு வருந்துகிறார். சூலூர் வரலாறு தொகுத்த செந்தலை கவுதமன் அவர்களைப் போலவே கலைப்பித்தனும் பாராட்டிற்குரியவர். 12 இதழ்கள்–A4 அளவில் 226 பக்கங்கள் நெருக்கமான அச்சு. ஒரு பெரும் சாதனை தான். தொடர்புக்கு : சூலூர் கலைப்பித்தன், சூலூர்.

படிப்பகம்

www.padippakam.com



# வள்ளுவம்

வள்ளுவம் இரு திங்கள் இதழ் என்ற அறிவிப்போடு முதல் இதழ் வெளிவந்திருக்கிறது. கவிஞர் தமிழன்பன் அவர்களின் வள்ளுவத்தின் புகழ் பாடும் புதுக்கவிதையோடு தொடங்கும் இதழ் ஆசிரிய உரையையும் சேர்த்து இருபது கட்டுரைகளை கொண்டிருக்கிறது. வள்ளுவத்தை பல நோக்கில் ஆய்வு செய்து எழுதப்பட்டிருக்கும் கட்டுரைகள். வள்ளுவத்தில் கலைச்சொற்களைக் கண்டறிந்து தமிழண்ணல் அவர்கள் எழுதுகிறார். இக்கால அரசியல் பொருளியல் சூழலுக்கும் வள்ளுவத்தில் நாம் கண்டறிய வேண்டியவை எவையெவை என்பதை ஞானி அவர்கள் வள்ளுவத்தில் மெய்ப்பொருளாய்ப் பேசுகிறார். சமதர்மத்திற்கான போக்கில் வள்ளுவம் சிந்திக்கப்படவேண்டும் என்பதை அழுத்தமாகப் பேசும் கட்டுரை ஞானியின் கட்டுரை. திருக்குறள் காலம் தோறும் உலகமெலாம் எப்படி ஒரு இயக்கமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இளங்குமரனார் விளக்குகிறார். வழியும், வழிபாடும் கட்டுரையில் புத்தரை ஒட்டி, வள்ளுவர் எப்படி சிந்தித்தார், தெய்வம் பற்றிய வள்ளுவரின் பார்வை என்ன என்பதை மருதமுத்து அவர்கள் எழுதுகிறார்.

திருக்குறளில் மலையாள மொழியாக்கம் பற்றி சிற்பி அவர்கள் எழுதுகிறார். மலையாளத்தில் இந்த வரவேற்பை படிக்கும் போது கன்னடத்தில் வள்ளுவருக்கு நேர்ந்திருக்கும் அவலம் பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை. தேசிய இலக்கியமென்று க.தா. திருநாவுக்கரசு அவர்கள் பேசும் போது அதற்கான சூழல் இந்தியாவில் இருந்திருக்கிறதா? இப்போதும் இல்லை என்பதுதானே உண்மை. இந்தியம் என்பதே பார்ப்பனியம் என்று உரக்க ஒலிக்கும் குரல் ஒன்று உண்டு என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழ் மண்ணில் வள்ளுவத்தில் ஆளுமையை நிலைநாட்ட மேற்கொள்ளவேண்டிய செயற்பாடு பற்றிச் சிந்தித்தல்தான் இன்றைக்கு தேவையாயிருக்கிறது. தமிழைச் செந்தமிழ் என்று நடுவனரசு அறிவிக்க வேண்டி நாம் செய்யும் செயல்பாடு பற்றி எல்லாம் அறிந்தவைதானே. அப்புறம் இந்தியம் தழுவித் திருக்குறளை தேசிய இலக்கியமாக்கும் முயற்சி பற்றி எழுதுவான். ஏன் என்று கேட்க தோன்றுகிறது. வணிக அரசியலை முன்னிறுத்தும் தமிழக, இந்திய அதிகார மையங்கள் திருக்குறளை பற்றியும் செம்மொழி பற்றியும் அக்கறை கொள்ளுமா? இந்த இதழில் சொல்லப்பட்டிருப்பது போல திருக்குறள் பேசப்படுவதற்கன்றி நடைமுறைப்படுத்துவதற்கல்ல என்பது தானே இன்று நம் நிலை. இந்த நிலை மாறவேண்டும் என்பதில் மிகுந்த முனைப்போடு வெளியிடப்பட்டிருக்கும் வள்ளுவம் இதழ் முயற்சி முனைந்து செயல்பட நாம் வாழ்த்தலாம். துணை நிற்கலாம்.

வண்ணங்களின் தெறிப்பு மிகுந்த அட்டைப்படம். தமிழ் வாசகர்கள் வாங்குவார்கள்.

— க. அறிவன்

தனி இதழ் ரூபாய் 25/– ஆண்டு உறுப்பினர் தொகை ரூபாய் 125/–

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்நாட்டில் புதியதோர் போர்க்குரல்!

மதுரை மாநகரிலிருந்து கவனிக்கப்பட வேண்டிய புதிய குரல் ஒன்று ஒலிக்கிறது. சோலை சுப்பிரமணியன் "செந்தமிழ்நாடு" எனும் சிறு வெளியீட்டினைக் கொணர்ந்துள்ளார். 48 பக்கங்களில் தற்போதைய தமிழகத்தை இரண்டு நிர்வாகப் பிரிவுகளாக்கி "தமிழ்நாடு" என்ற ஒரு வடபகுதியையும் "செந்தமிழ் நாடு" என்ற தென்பகுதியும் அமைய வேண்டும் என்கிறார். வட மாவட்டங்கள் வளம் பெற்று வளர்கின்றன. தென் மாவட்டங்கள் தேய்கின்றன என்றும் கூறுகிறார். மொழி வழி மாநிலம் அமைந்தபோது தமிழகத்திலிருந்து பிரித்துக் கொடுக்கப்பட்ட மலையாள, தெலுங்கு பகுதிகளை அநியாயமாக இழந்து விட்டோம் என ஆதங்கப்பட்டு, திட்டம் வகுத்தவர்களை திட்டித் தீர்க்கிறார். ஆசிரியரின் தமிழ்ப் பற்று கட்டுமீறிப் போவதாகவே தெரிகிறது. தெற்கே உள்ள பதினெட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய செந்தமிழ்நாடு அமைந்தே தீரும் என்று உறுதிபடக் கூறுகிறார். 124 எம்.எல்.ஏ. தொகுதியும்,.20 எம்.பி. தொகுதியும் அடங்கிய பகுதியில் 2 கோடியே 88 லட்சம் ஆட்சிப் பொறுப்பேற்று முன்னேற வேண்டும் என்கிறார். ஆறு பக்கங்களில் புதியதோர் தேர்தல் வழியையும் கூறுகிறார். புதிய கலகத்தை உருவாக்கியிருக்கிறார். அதைத் தொடரலாமா வேண்டாமா என்பதைத் தமிழர்கள் சிந்தித்தே ஆகவேண்டும்.

– தி. ரங்கசாமி

வெளியீடு: பல்லடம் மாணிக்கம், திருக்குறள் பண்பாட்டு ஆய்வு மையம், திருமுதுகுன்றம் – 606 001

# நேயத்தோரு தமிழ்க்கல்வி

– ஞானி

1. தமிழ் தொன்மையான மொழி. குமரிக் கண்டத்தோடும் சிந்து சமவெளி நாகரிகத்தோடும் தமிழை இணைத்து அறிஞர்கள் பேசுகிறார்கள். ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியப் பெருநிலம் முழுவதும் பரவியிருந்த மொழி தமிழ் என்று சொல்லுகிறார்கள். கிரேக்கம், சீனம் முதலிய நாடுகளோடு தமிழ் மக்கள் வணிகம் முதலிய களங்களில் தொடர்பு கொண்டிருந்தார்கள். இப்படிச் சொல்லுவதற்கான சான்றுகள் நிறையவே உள்ளன. சாங்கியம் முதலிய மெய்யியல்கள் தமிழருக்குரியவை. வேதங்களிலும் திராவிடருக்குரியவை என அறியத்தக்க சில கூறுகள் உள்ளன என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இதைப் பற்றிய ஆய்வுகள் நிறையவே உள்ளன. இவற்றையெல்லாம் நாம் ஆராய்ந்து கற்கவேண்டும். பிற நாகரிகங்களுக்குத் தமிழர்கள் தந்த நன்கொடைகள் பற்றியும் நாம் ஆராய்ந்து காணவேண்டும். எந்தவொரு நாகரிகமும் தனித்து இருக்க முடியாது. இன்னொரு நாகரிகத்தோடு கலந்தும் மோதியும் தான் ஒரு நாகரிகம் தன்னை வளர்த்துக் கொள்ள இயலும். ஆரிய நாகரிகத்தோடு நமக்கு உறவும் பகையும் வரலாற்றில் இருந்தன. இன்று வரை அவை தொடர்கின்றன. சமணமும் பவுத்தமும் கூட வெளியிலிருந்து வந்தன என்றாலும் இவை தமிழருக்கு உரியவையாயின. தமிழ் நாகரிகத்தோடு கலந்து இவையும் தமிழ்ச் சமயங்கள் ஆயின. தொல்காப்பியரையும்

படிப்பகம்

www.padippakam.com



இளங்கோவையும் சாத்தனாரையும் இவர்களைப் போல் இன்னும் பலரையும் அசலான தமிழர்கள் என்று தான் கருதுகிறோம். இவர்கள் இல்லை என்றால் தமிழின் ஆக்கம் குறித்து இன்று நாம் பேச முடியாது.

இவ்வகையான நாகரிகக் கலப்பென்பது காலந்தோறும் தொடர்கிறது. இசுலாமியரோடும் கிறித்தவர்களோடும் நமக்கு ஏற்பட்ட தொடர்புகள் மிக விரிவானவை. மேற்கத்தியரோடு நமக்கு இன்றும் தொடரும் உறவுகள் மிக ஆழமானவை. இவற்றின் வழியாக நமக்கு நேர்ந்த அழிவுகளையும் ஆக்கங்களையும் ஆராய்ந்து கற்பது தமிழ்க் கல்வியின் ஒரு முக்கியமான கூறு. இன்றும் நமமைத் தமிழர்கள் என நம்மை நாமே அடையாளப்படுத்திக் கொள்வதற்கானக் கூறுகள் யாவை? என்பது குறித்து நமக்கு ஆழ்ந்த அக்கறை தேவை. தமிழராக இருந்துதான் நாம் யாரோடும் உறவு கொள்ள முடியும். உலகத்தோடு உறவு கொள்ள முடியும். தமிழ் மொழியை இழந்து, தமிழ் நிலத்தை இழந்து, தமிழ் மக்களின் வாழ்வுக்கான ஆதாரங்களை இழந்து, தமிழ் வரலாற்றை இழந்து, இவற்றையெல்லாம் அந்நிர்களுக்கு விட்டுக் கொடுத்து நாம் பிறரோடு உறவு கொள்ள முடியாது. இன்றும் நாம் தமிழிலக்கியத்தை தமிழர் நாகரிகத்தை தமிழ் வரலாற்றை கற்பதற்கு இது தான் குறிக்கோள். இவ்வகையில் கற்பது தான் அய்யம், திரிபு அறக்கற்றல். ஆழமாகக் கற்றல். நம் வாழ்வுக்கான குறிக்கோளோடு கற்றல். வள்ளுவர் நெறியில் கற்றல். நம்மைத் தமிழர் என்று உணர்வதற்காகத் தான் இப்படிக் கற்கிறோம். தமிழ் உணர்வு என்பது தற்காப்பு உணர்வு. நம்மை தாமே படைத்துக் கொள்ள வேண்டும் எனும் உணர்வு. அன்பையும் அறனையும் நமக்குள் எழுப்பிக் கொள்வது இந்த உணர்வு. உலகத்தை நாம் நேசிக்கிறோம். தொன்மையானவன் என்பதற்காக நமக்குள் ஆணவம் இல்லை. தொன்மையானவன் என்ற முறையில் நமக்குச் சில பொறுப்புகள் உண்டு இவற்றையெல்லாம் உணர்ந்து தான் நாம் தமிழ் கற்கிறோம்.

தமிழ்க் கற்பதென்பது தமிழ் இலக்கியத்தைக் கற்பது. தமிழ் இலக்கியம் தொன்மையானது மட்டுமல்ல மிக விரிவானது. உலகில் சில இனங்களுக்கு மட்டுமே இந்த அளவுக்கு தொன்மையும் விரிவும் உண்டு. தமிழின் இலக்கிய வகைகள் என பலவற்றைச் சொல்ல முடியும். இலக்கியத்தோடு சேர்த்து இலக்கணத்தையும் கற்கிறோம். எழுத்தும் சொல்லும் மட்டுமல்லாமல் பொருளியலும் இலக்கணத்தினுள் இயல்கின்றது. பிற்காலத்தில் யாப்பு அணி என்று பிரித்துக் கற்க நேர்ந்த பொழுதிலும் இவற்றையும் பொருள் இலக்கணத்தினுள் அடக்கி கற்கிறோம். இப்படிக் கற்கும் பொழுது வாழ்வியல் குறித்து நாம் கூடுதலாகக் கற்க முடியும். வாழ்க்கையிலிருந்துதான் இலக்கியம் எழுகிறது. வரலாற்றுச் சூழலுக்கு ஒத்த முறையில் வாழ்க்கை மாறுகிறது. இதற்கேற்றவாறுதான் இலக்கியங்களும் மாறுகின்றன. இலக்கியத்தில் மாறுதல் விரைவாக நிகழும். இலக்கணத்தினுள் மாறுதல்கள் ஏற்படுவது உண்மையென்றாலும் இந்த மாற்றங்கள் உடனடியாக தெரிவதில்லை நீண்டநாள் நோக்கில் தெளிவாகவே புலப்படும்.

**2.** தமிழின் இலக்கிய வகைகள் என முதலில் சங்க இலக்கியத்தையும் அதனைஅடுத்து அற இலக்கியத்தையும் பின்னர் காப்பியமென்றும் பக்தி இலக்கியமென்றும் புராணங்கள் என்றும் கூறுகிறோம். இதன் பிறகு சிற்றிலக்கியங்கள் இறுதியாக பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டிற்கு வந்து சேர்கிறோம். இங்கு

படிப்பகம்

www.padippakam.com



செயல்படுபவை நவீன இலக்கியங்கள். வள்ளலார் முதற்கொண்டு பாரதி பாரதிதாசன் முதலியவர்களை உள்ளடக்கிப் பேசுகிறோம். இக்காலத்தில்தான் சங்க இலக்கியம் முதலியவற்றைப் புதியனவாக கண்டுபிடித்தோம் தமிழுக்குள் சிறுகதை, புதினம், புதுக்கவிதை முதலிய புத்திலக்கிய வகைகள் நுழைந்தன. தமிழின் தொன்மை முதுலிவற்றை இக்காலத்தில்தான் கண்டறிந்தோம். சங்க இலக்கியத்திற்கும் திருக்குறள் முதலிய இலக்கியங்களுக்கும் இக்காலத்தில்தான் மீண்டும் ஒரு புத்துயிர்ப்பு கிடைத்தது. தமிழின் மிகப்பெரும் ஆய்வுகள் இக்காலத்தில்தான் தொடங்கின. உ.வே.சா. முதலியவர்களை நாம் என்றும் போற்றுவதற்கு இதுதான் காரணம். வெளிநாடுகளிலிருந்து வந்த கிறித்துவ சமயப் பணியாளர்களை தமிழ்மொழி ஈர்த்ததோடு அவர்களின் வழியே தமிழ் தன்னைப் புதியதாகப் படைத்துக் கொண்டதும் இக்காலத்தில் தான். தமிழன் தன்னை வரலாற்றிலிருந்து முழுஅளவில் இக்காலத்தில் தான் தன்னை திரட்டிக் கொண்டான் என்று சொல்ல முடியும்.

எத்தனையோ தமிழியக்கங்கள் இக்காலத்தில் தோன்றின. புதிய நெறியில் சைவமும் தன்னைத் திரட்டிக் கொண்டது. தமிழ் நெறியின் ஆற்றல் மிக்க ஒரு நெறியென பகுத்தறிவு இயக்கம் இக்காலத்தில்தான் தோன்றியது. தமிழ் மக்களின் விடுதலை வேண்டி அரசியல் இயக்கங்கள் தோன்றின. இந்தியா என்பதோடு ஒத்ததாகவும் முரண்பட்டதாகவும் இவ்வகை இயக்கங்கள் இன்று வரை செயல்படுகின்றன. இறுதியாகத் தோன்றியிருப்பது தமிழ்த் தேசிய இயக்கம். தமிழ் மக்களின் நாடு மற்றும் மொழி, பொருளியல், அரசியல் முதலிய அனைத்தையும் தமிழ் மக்களின் நலன்களுக்காகவே விடுவித்துக் கொள்ளவேண்டிய பெரும் நெறியை முன்வைக்கின்றன தமிழ்த் தேசிய இயக்கங்கள்.

மீண்டும் சொல்லலாம் தமிழ் என்பதையோ தமிழ் இலக்கியம் என்பதையோ, தமிழ் வரலாறு என்பதையோ இன்றைய வரலாற்றுத் தேவையை ஒட்டியும் தான் நாம் கற்கிறோம். தொன்மையான நாகரிகம் உடைய எந்த மொழியும் எந்த இலக்கியமும் தன்னை மற்றவர்களுக்கு அடிமைப்படுத்திக் கொள்ள இயலாது. விடுதலை வேண்டித் தான் இலக்கியம் முதலியவற்றைக் கற்கிறோம். கால்டுவெல்லும் மறைமலை அடிகளாரும், மனோன்மணியம் சுந்தரனாரும் சோமசுந்தர பாரதியும் திரு.வி.க முதலிய பலரும் தமிழின் ஆக்கத் திறன்களை விடுவிக்கும் முறையில், வளர்க்கும் முறையில் செயல்பட்டனர். பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன் முதலியவர்களையும் நாம் இப்படித் தான் பார்க்கிறோம். பெரியார், அறிஞர் அண்ணா முதலியவர்கள் மேற்கொண்டதும் இவ்வகைப் பணிதான். இவர்களின் வரிசையில் இன்னும் பலரை நாம் குறிப்பிடவேண்டும். தெ.போ.மீ., மு.வ., வ.சுப.மாணிக்கம், அ.ச. ஞானசம்பந்தம், அவ்வை துரைசாமி என்றும் பலரை குறிப்பிடலாம். நம் காலத்தில் க.ப. அறவாணன், ம.லெ.தங்கப்பா, கு.ச.ஆனந்தன், இளங்குமரன், வ.சே.குழந்தைசாமி, தமிழண்ணல் என்றும் பலரைக் குறிப்பிடலாம். இவர்கள் வழியே தமிழ் இலக்கியம் கற்கிறோம். தமிழ் வரலாறு கற்கிறோம். தமிழர்களின் வாழ்வியலையும் மேம்பாட்டுக்கான வழிமுறைகளையும் கற்கிறோம். இவர்கள் வழியே சங்க இலக்கியம் முதற்கொண்டு தமிழ் இலக்கியத்தில் பல்வேறு ஆக்கங்கள் செயல்படுகின்றன. தமிழ் கற்பதற்கான ஆய்வு முறைகள் பலவற்றை இன்று நாம் கடைப்பிடிக்கிறோம். தமிழ் கற்பதென்றால் இலக்கியம்

படிப்பகம்

www.padippakam.com



மற்றும் இலக்கணம் அல்லது சமயம் கற்பதென்பது அய்ம்பதாண்டுகளுக்கு முற்பட்ட போக்காக இருந்தது. பெரும் புலவர்கள் இவ்வகை புலமை நெறியை தமிழ் ஆய்வின் பெரும் நெறியாக கொண்டிருந்தனர். இவர்களின் ஆய்வுகள் மகத்தானவை என்பதில் அய்யமில்லை. கால ஆராய்ச்சியில் இவர்கள் பெரும் கவனம் கொண்டிருந்தனர். தொல்காப்பியர், திருவள்ளுவர் என்று தொடங்கி எத்தனையோ புலவர்களின் எத்தனையோ தமிழ் சான்றோர்களின் காலத்தை வரையறை செய்வதில் துணிந்திருந்தனர். கிரேக்கம் முதலிய நாகரிகங்களோடு ஒப்பிட்ட நிலையில் தமிழ் இலக்கியவாணர்களின் காலத்தையும் கிறித்து பிறப்பதற்கு முன்பு தள்ளிப் பார்ப்பதற்கு முனைந்திருந்தனர். ஆரியர் தம் நாகரிகத்தின் தொன்மைக்கு நிகரானது நம் தொன்மை என்பதை மெய்ப்பிப்பதில்தான் இவர்கள் முனைப்புக் கொண்டிருந்தனர். இவர்கள் தம் வாழ்வின் பெரும் பகுதியை இப்படித்தான் செலவிட்டனர். ஒவ்வொரு இனமும் தன் தொன்மையைக் கண்டறிவது தேவையானது என்பதில் அய்யமில்லை. நாகரிகங்களின் மோதலின் போது தமது நாகரிகத்தின் மேன்மையை மெய்ப்பிப்பதின் நோக்கில் இவர்கள் தீவிரமாக செயல்பட்டதையும் நாம் புரிந்து கொள்கிறோம்.

இவர்களுக்குள் செயல்பட்டது நீயா? நானா? என்ற ஆளுமை மோதல். என்னதான் இவர்கள் சமய உணர்வாளராக இருந்த போதிலும் இந்த ஆளுமை மோதலை இவர்களால் தவிர்த்துக் கொள்ள இயலவில்லை. வரலாற்றின் வழியில் தொடர்ந்து வந்த இந்த மோதல் இவர்களின் அண்மைக்காலச் சூழலில் அதிகரித்ததின் விளைவு இன்றும் இவர்களின் ஆளுமை மோதலை நாம் பார்க்கமுடியும். ஆரிய நாகரிகத்தினுள் தமிழ் நாகரிகத்தின் தனித் தன்மைகளை அழித்து தமிழ் நாகரிகத்தை முழுமையாக தனக்குள் அடிமைப்படுத்தவேண்டும் என்கிற முறையில் ஆரிய நாகரிகம் செயல்பட்டதையும் நாம் இங்கு கருதவேண்டும். அரசியலினுள்ளும் இப்போக்கு கடுத்தம் கொண்டதைப் பார்க்கிறோம்.

3. திராவிட நாகரிகம் தனித்தன்மை கொண்டது என்பதில் அய்யமில்லை. ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியா என்று பிறகு அறியப்பட்ட நிலப்பரப்பு முழுவதும் வாழ்ந்தவர் திராவிடர். இவர்கள் மண்ணுலக வாழ்க்கைக்கு அழுத்தம் தந்தனர். இயற்கையைப் போற்றினர். பெண்களை மதித்தனர். வேளாண்மை என்ற அடிப்படையில் இவர்கள் தம் நாகரிகத்தை படைத்துக் கொண்டனர். இவர்களின் தெய்வங்கள் மனிதர்களோடு நெருக்கமான உறவு உடையவை. திராவிடர்கள் மண்ணுலகம், வாழ்க்கை, மனித உறவுகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் மெய்யியல் படைத்துக் கொண்டனர். சாங்கியம், வைசேடிகம் முதலியவை திராவிடர்களின் மெய்யியல். பவுத்தம், சமணம் ஆகியவற்றையும் திராவிட மெய்யியலில் சேர்த்துச் சொல்லமுடியும். அறத்துக்கு அழுத்தம் தருவது பெளத்தம். வினைக் கோட்பாட்டிற்கு அழுத்தம் தருவது சமணம். நாளடைவில் இவற்றையெல்லாம் ஆரியம் தனக்குள் பற்றிக் கொண்டது. திராவிடரின் மெய்யியல் உலகியலுக்கு அழுத்தம் தந்தது என்றால் ஆரியரின் மெய்யியல் மேலுலக வாழ்விற்கு யாகங்களுக்கு, சடங்குகளுக்கு வருண முறைக்கு அழுத்தம் தந்தது என்றும் சொல்லமுடியும். உடைமை, அரசு, வாழ்வியல் இன்ப துன்பங்கள் முதலியவற்றை உலகியல் வாழ்வுக்கு அப்பால் தள்ளியது ஆரியம் என்று சொல்வது தகும்.

இப்படித்தான் இன்றளவும் விவாதங்கள் நடைபெறுகின்றன. எந்தவொரு

படிப்பகம்

www.padippakam.com



சமுதாயத்தினுள்ளும் இவ்வாறு எதிரெதிரான போக்குகள் இருக்கத்தான் செய்யும். அடங்குகள் இல்லாமல் அன்றும் இன்றும் எந்த இனமும் இல்லை. சாதியமைப்பு இந்தியாவில் வலுப்பெற்றதைக் கூட இவ்விரு இனங்களின் சார்பில் வைத்துத்தான் விளக்கமுடியும். உடைமையும் அரசும் ஆதிக்கம் கொள்கிற எல்லா காலங்களிலும் வாழ்வியலில் திரிபுகள் மிகத்தான் செய்யும். வரலாறு எப்பொழுதும் செந்நெறியில் இயங்குவதில்லை. ஒவ்வொரு இனமும் அதற்கான தனித்தன்மை கொண்டிருக்கின்றன. நான் தான் தொன்மையானவன். எல்லா பெருமைகளும் எனக்கே உரியவை என்றொரு குரல் எழும்புமானால் அதற்கு எதிராக இன்னொரு குரல் எழும். ஆரியர், திராவிடர் இனப் போராட்டத்தில் இன்றளவும் இதைத்தான் பார்க்கிறோம். அதிகாரத்தையும் உடைமையையும் அனைத்து மக்களும் உரிமை கொள்ளும் பொழுது இந்தச் சிக்கலின் கடுத்தம் குறையலாம்.

**4.** தமிழ் இலக்கிய ஆய்வினுள்ளும் இந்த இனமோதல் பல பத்தாண்டுகளுக்கு கடுமையாகவே செயல்பட்டது. வடமொழியில் இருந்துதான் தமிழ் வந்தது என்றும் கூறிக் கொண்டனர். திருக்குறளுக்கு மூலம் வடமொழி. வடமொழி மூலத்திலிருந்து தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தார். வள்ளுவரின் இன்பத்துப் பாலுக்கு மூலம் வாத்சாயனர். – இப்படித் தொடங்கி தமிழ் இலக்கியம், இலக்கணம், வாழ்வியல் முதலிய நூற்றுக்கணக்கான கூறுகளை ஆரிய நாகரிகத்தோடு இணைத்துக் கூறினர். இவற்றை மறுக்கும் முறையில் எவ்வளவோ எழுதப்பட்டன. இராகவய்யங்கார், வையாபுரிப் பிள்ளை, சீனிவாசப் பிள்ளை, நீலகண்ட சாத்திரியார், மறைமலை அடிகள் எனப் பலரை இங்கு நினைவு கொள்கிறோம். மேடு பள்ளங்களும் வளைவுகளும் திரிபுகளும் சோகங்களும் கொண்ட இந்த வரலாற்று ஆய்வுகளை திரும்பவும் நாம் ஒரு முறை படித்துப் பார்ப்பதில் தவறில்லை. கடந்த ஒரு நூற்றாண்டு ஆய்வுகளை மட்டும் தொகுத்தால் ஒரு நூலகத்தில் அடுக்க முடியும். நிகழ்கால வரலாறுதான் முன்னைய வரலாற்றை நிர்ணயிக்கிறது என்ற உண்மைக்கு இந்த ஆய்வுகளும் சான்றுகளாகின்றன. வரலாறு குறித்து இத்தகைய பார்வையில் தெளிவு பெறுவது நமக்கு இன்றும் உள்ள எத்தனையோ சிக்கல்களுக்கு தெளிவு ஏற்படுத்தும். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து மேற்கொண்ட இலக்கிய ஆய்வு முறைகளிலிருந்து எவ்வளவோ இன்று மாறுபட்டு வந்திருக்கிறோம். திராவிட இயக்கத்தின் ஆய்வுகளைப் போலவே மார்க்சியரின் ஆய்வுகளும் மிக முக்கியமானவை. கால ஆராய்ச்சி என்பதற்குப் பருண்மையான வடிவம் தந்தவர் மார்க்சியர் என்பது பொருந்தும். வரலாறு என்பது வர்க்க போராட்டங்களின் விளைவு என்பது மார்க்சியரின் கொள்கை. இதன் அடிப்படையில் வள்ளுவர், இளங்கோ முதலியவர்களின் வர்க்கச் சார்பை மார்க்சியர் கண்டனர்.

**5.** இவர்கள் தமிழ் இலக்கியங்களையும் இந்த அடிப்படையிலிருந்து விளக்கினர். திராவிட இயக்க அரசியலோடு முரண்பட்ட நிலையில் தமக்கான அரசியலை வளர்த்தெடுக்கும் நோக்கில் பழந்தமிழ் இலக்கிய ஆய்வில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று பொதுவாகச் சொல்லலாம். இலக்கிய ஆக்கத்தை தீர்மானிப்பது அரசியல்தான் என்பது இவர்கள் நம்பிக்கை இலக்கியத்திற்கு தனி இயக்கம் இருக்க முடியாது. இலக்கியத்தின் வழியே சமூக அமைப்பை / சமூக இயக்கத்தைக் கண்டு சொல்லமுடியும் என்பதும் இவர்கள் நம்பிக்கை இந்தியச் சமுதாயம் சாதிச் சமுதாயம்தான் என்று

படிப்பகம்

www.padippakam.com



திராவிட இயக்கத்தினர் சொன்னபோது இவர்கள் வர்க்கச் சமுதாயம்தான் என்று கூறினர். தமிழின் தொன்மை மேன்மை என்றெல்லாம் திராவிட இயக்கத்தவர் கூறியதை இவர்கள் மறுத்தனர். திராவிட இயக்கம் ஹிட்லரைப் போல் இனப்பெருமை பேசுகிறது என்று இவர்கள் நம்பினர். இந்தியா ஒரு துணைக்கண்டம் என்று திராவிட இயக்கத்தவர் கூற இவர்கள் இந்தியா ஒரு தேசம் என்றனர். இப்படி இவர்களுக்கிடையில் எத்தனையோ முரண்பாடுகள் இந்த முரண்பாடுகள் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியைப் பாதித்தன என்பதில் அய்யமில்லை. முரண்பாடுகளைக் கடந்து ஒத்துச் செல்லுகிற ஒரு போக்கு இன்று உருவாகி வருகிறது.

மார்க்சியரின் வரலாற்றுப் பார்வையில் குறைகள் இல்லாமல் இல்லை அதைப்போலவே திராவிட இயக்கத்தவரின் வரலாற்றுப் பார்வையில் குறைகள் உண்டு. இலக்கியம் குறித்த பார்வையிலும் இவர்களை வேறுபடுத்திக் காண முடியும். ஒன்றை மற்றது மறுப்பதாகிய பார்வைகள் இன்றளவும் செல்வாக்கோடுதான் செயல்படுகின்றன. நெருக்கமாக இருந்து கலந்தாய்வு என்பது இன்றும் அழுத்தம் பெறவில்லை.

வரலாற்றியல் ஆய்வின் வளர்ச்சிப் போக்கில் சமூகவியல் நோக்கிலான ஆய்வு முறையும் தமிழுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. சில இலக்கியங்கள் குறிப்பிட்ட சில காலச் சூழலில் முன்னுக்கு வருகின்றன. ஒரு காலத்தில் புறக்கணிக்கப்பட்ட சங்க இலக்கியம் இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் முன்னுக்கு வருகின்றது. அச்சு வாகனங்களின் வழியே தமிழிலக்கியம் அனைத்துத் தமிழ் மக்களின் முன்னிலைக்கு வந்து சேர்கிறது. செய்யுள் வழக்கை காட்டிலும் உரைநடை கூடுதலான முக்கியத்தும் பெருகிறது. சிறுகதை, புதினம், முதலிய வடிவங்கள் மக்கள் மத்தியில் பழக்கத்திற்கு வருகின்றன.

மக்களியம் என்ற சமூகவியல் போக்கின் வளர்ச்சியை ஒட்டித்தான் இவற்றை விளக்கமுடியும். முதலாளியத்தின் வரவை ஒட்டி சாதியகட்டமைப்பில் ஒரு தகர்வு நேர்கிறது. உயர் சாதியினருக்கென்று ஒதுக்கப்பட்ட கல்வி நடுத்தர மக்களுக்குக் கிடைக்கிறது. நடுத்தர மக்களின் ஆதரவோடு தான் அரசு செயல்பட முடியும். தொழில் வளர்ச்சியின் விளைவாக நகரங்கள் ஏற்படுகின்றன. நாகரிகம் பரவலாகிறது. இதழியல் முதலிய நிறுவனங்கள் தோன்றுகின்றன. இப்படித்தான் பண்டிதர்களோடு நின்றிருந்த தமிழ் பாமர மக்களுக்கும் வந்து சேர்கிறது. திறனாய்வுக்கும் இப்பொழுதுதான் தேவை ஏற்படுகிறது. நகரத்தார், உயர் சாதியினர் புதுக்கவிதை முறையை தமக்குரியதாக எடுத்துக் கொண்டனர். அரசியல் இயக்கங்களும் தமிழோடு தம்மை இணைத்துக் கொள்கின்றன. இவ்வாறெல்லாம் நேர்ந்த நிகழ்வுகளை சமூகவியல் நோக்கில்தான் விளக்கமுடியும். பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தொடங்கிவைத்த இந்த ஆய்வு முறை மேலும் வளர்ச்சி கண்டு வருகிறது.

6. இலக்கியம் குறித்த பார்வையில் இன்று வளர்ந்து வருகிற புதிய ஆய்வு முறைகள் குறித்து இங்கு குறிப்பிட வேண்டும். செவ்வியல் இலக்கியங்கள்தான் இலக்கியம் என்று முன்பு புலமை நெறியினர் நம்பினர் நாட்டார் கலைகளும் இலக்கியங்களும் தொடர்ந்து தொகுக்கப்படுவதும் ஆய்வுக்குள்ளாக்கப்படுவதும் நடைபெறுகிற இன்றையச் சூழலில் இலக்கியம் குறித்த கருத்தாக்கம் பெருமளவில் வேறுபட்டு வருகிறது. பழமொழிகள் நாட்டுப்புறக்கதைகள் நாட்டுப்புறப் பாடல்கள் முதலிய அனைத்தும் மக்களின் இலக்கிய

படிப்பகம்

www.padippakam.com



ஆக்கங்கள் தான். எழுத்து வடிவில்தான் இலக்கியங்கள் உள்ளன என்பது உண்மையில்லை எழுதப்படாமல் மக்கள் நாவில் தவல்வனவும் தமிழ் இலக்கியம்தான். தமிழ் இலக்கிய ஆய்வு என்று மேற்கொள்ளும்போது நாட்டார் கதைகளை மட்டுமல்ல நாட்டார் கலைகள், வாழ்வியல், வேளாண்மை, கைத்தொழில், மருத்துவம் என்று தொடங்கி நூற்றுக்கணக்கான வழிகளில் தமிழ் ஆய்வு தொடர வேண்டும். எல்லா மனிதருக்குள்ளும் கலைஞர் இருக்கின்றனர். இப்படி ஆய்வு தொடரும்போது மீண்டும் ஒரு திணைக்கோட்பாட்டை தமிழ் இலக்கிய ஆய்வுக்கு கண்டு தொகுக்க முடியும். மக்களுக்கு மிக நெருக்கமாக செல்வது இந்த ஆய்வு. மக்களின் தமிழை இவ்வகையில்தான் நாம் சரியாகக் கற்றுக் கொள்கிறோம். நிலத்தோடும் நீரோடும் உயிர்களோடும் பயிர்களோடும் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ள இந்த மக்கள்தான் அசலான தமிழர்கள். படிப்பாளிகள், அறிவாளிகள் என்ற முறையில் நாம் இவர்களிடமிருந்து அந்நியப்பட்டுத்தான் நிற்கிறோம். இவர்களின் வாழ்வு ஆக்கம் பெறுகிற நிலையில்தான் தமிழ்ச்சமுதாயம் உயிர்துடிப்புடன் இயங்கும். நாம் இவர்கள்மீது அமர்ந்திருக்கிறோம். எல்லாவற்றையும் இவர்களுக்கு உரிமைப்படுத்துவதின் மூலமே நம் வாழ்க்கை அர்த்தம் பெறும் இதுதான் தமிழ் வாழ்க்கையாகப் பொழிவு பெறும்.

செவ்வியல் இலக்கியங்களுக்குள்ளும் நாட்டார் கலை இலக்கியக் கூறுகளை நாம் மிகுதியாகக் காணுகிறோம். இப்படிக் காணும் பொழுதுதான் மகளிரின் மேன்மையான படைப்புத்திறனையும் புரிந்து கொள்கிறோம். தமிழ் இசை குறித்த ஆய்விலும் நாம் தொன்மையான மரபுகளைத் தேடிக் கண்டடைகிறோம். இன்று கர்னாடக இசை என்று சொல்லப்படுவது தமிழ் மக்களின் தொன்மையான இசையிலிருந்து தோன்றியதுதான் என்பதை அறிந்து கொள்கிறோம். இடையில் செயல்பட்ட சக்திகள் குறித்தும் இன்று நாம் புரிந்து கொள்கிறோம். பரதநாட்டியம் என்று அமைந்திருக்கிற நாட்டியத்தின் தொன்மையைத் தமிழ்க் கூத்துக்களில் காண்கிறோம். நமது சிற்ப மரபு, கட்டிடக் கலை மரபு முதலியவை குறித்துப் புரிந்து கொள்ளும்போது நாம் விம்மிதம் அடைகிறோம். கல்லணை குறித்து நாம் அடையும் வியப்புக்கு அளவில்லை. வேளாண்மைத் தொழில், இன்னும் பலநூறு கைவினைகளில் நம் தமிழ் மக்களின் திறன்களைக் கண்டு வியப்படைகிறோம். சங்க காலச் சூழலுக்குள் இயல்பாய் நாம் உலவி வரமுடியும்.

7. ஒப்பியல் ஆய்வு நெறி என்பது முன்பே நமக்கு அறிமுகமானது எனினும் இன்றும் வளர்த்துச் செல்ல வேண்டிய முக்கியநெறி. கிரேக்கத்தின் அவல நாடகங்கள், சேக்சுபியரின் அவல நாடகங்கள் முதலியவற்றிலிருந்து அவல நாடகங்கள் குறித்த செறிவான கருத்தைச் சிலப்பதிகார ஆய்வுக்கு நாம் பொருத்திக் காணமுடியும். கிரேக்க இலக்கியத்திற்கும் சங்க இலக்கியத்திற்கும் சில ஆய்வாளர்கள் ஒப்புமை கண்டு அழுத்தமாகக் கூறியிருக்கின்றனர். மேற்கில் வளர்ச்சி பெற்ற புனைவியல் எதார்த்தவியல் இருத்தலியல் மற்றும் உளவியல் நோக்குகளைப் பயன்படுத்தியும் தமிழ் இலக்கிய ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தினுள்ளும் மணிமேகலையினுள்ளும் எதார்த்தவியலின் சில அழுத்தமான கூறுகளை நாம் காணமுடியும். புனைவியலின் சில முக்கியமான கூறுகளை கத்தே, ஷெல்லி முதலியவர்களோடு ஒப்பிட்டு பாரதி, பாரதிதாசன் முதலியவர்களுக்குள்ளும் நாம் காணமுடியும். சித்தர் நெறி என்பது உலகளவிலான ஆற்றல்மிக்க ஒரு நெறி சித்தர்களின் வழியே உலகத்தோடு நாம் ஒருமை காணமுடியும்.

www.padippakam.com



இருவேறு இலக்கியங்களை ஒப்பிட்டுக் காண்பது என்று தொடங்கிய ஒப்பியல் ஆய்வுமுறை எல்லா மொழி இலக்கியங்களினுள்ளும் செயல்படுகிற படைப்பியக்கம் குறித்த ஆய்வுக்கு அழுத்தம் தருகிறது. தமிழ் இலக்கியத்தினுள் செயல்பட்ட படைப்பியக்கத்தை நாம் என்னவென்று கொண்டாடுவது எத்தனை பேரிலக்கியங்களை நாம் கொண்டிருக்கிறோம். எத்தனை வகை இலக்கியங்களை, கலைகளை நாம் கொண்டிருக்கிறோம். இந்திய இலக்கியத்தோடும் ஒப்பிட்டு நம்மவர் ஆய்கின்றனர். இலக்கியத்தைப் போலவே சமயத்துறை பற்றிய ஆய்விலும் ஒப்பியல் ஆய்வு முறையை ஆழமாக நம்மால் பயன்படுத்த முடியும். இப்படிச் செய்யும்பொழுது தமிழ் மெய்யியலின் ஆழத்தை நாம் அறிய முடியும்.

**8.** மேற்கிலிருந்து புதிய இலக்கிய வகைகளை நாம் வரித்துக் கொண்டதோடு திறனாய்வு முறையையும் பெற்றிருக்கிறோம். மேற்கத்திய ஆய்வு முறைகள் தமிழ் மரபை அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்க முடியுமா என்ற கேள்வி அடிக்கடி நமக்குள் எழுகிறது. க.ந.சு. முதலியவர்கள் தமிழ் மரபிலான ஆய்வு நெறியை கண்டறிய வேண்டுமென்று வற்புறுத்தினர். தமிழர்களின் திணைக்கோட்பாட்டை இன்று கேரளத்தில் அய்யப் பணிக்கர் முதலியவர் தம் இலக்கிய ஆய்வுக்குப் பயன்படுத்துகின்றனர். ஆரியத்துக்கு மாறுபட்டது திராவிடர்களின் திணைக்கோட்பாடு நாம் திராவிடர்கள். எந்தவொரு இனமும் தம் மரபிலிருந்துதான் வெளியிலிருந்து வரும் எதையும் புரிந்து கொள்ள முடியும் போற்ற முடியும். இணைத்துக் கொள்ள முடியும். மரபின் வேர்கள் வலுவாகக் கொண்டிருக்கும் ஒரு சமூகம்தான் பிற சமூகத்தை எதிர்கொள்ளும்போது தனக்குள்ளிருந்து புதிய கிளைகளைத் தோற்றுவித்துக் கொள்ள முடியும். சேக்சுபியரின் இலக்கியத்தையும் நம் மரபிலிருந்துதான் நாம் புரிந்து கொண்டு போற்ற முடியும் என்னதான் ஆங்கில அறிவு பெற்றாலும் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த ஆங்கிலேயர் சேக்சுபியரைப் புரிந்து கொள்வதற்கு நாம் புரிந்து கொள்வதற்கும் இடையில் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். நம் மரபு இன்னதென்று புரிந்து கொண்டு அதை வளர்த்தெடுக்கும்போதுதான் நமக்குள் படைப்புத்திறன் மேம்படும் எல்லா களங்களிலும் அந்நியருக்கு இடம் தருவதின் மூலம் நம்மை நாமே அழித்துக்கொள்கிறோம்.

அய்யப் பணிக்கரின் கருத்துக்களை இவ்வாறு நாம் விரித்துக் கொள்ள முடியும். தமிழ் மரபை தேடிச் செல்லும்போது பக்தி இலக்கியமும் நம் மரபுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். சமணம் பௌத்தம் முதலியவற்றில்லாமல் சைவத்தினுள்ளும் வைணவத்தினுள்ளும் செயல்பட்ட நம் மரபை புரிந்து கொள்ள முடியும். சாதி முதலிய சக்திகள் என்னதான் ஆற்றலோடு செயல்பட்டாலும் இவற்றை மறுத்து ஒதுக்குகிற சித்தர் நெறியை வள்ளுவருக்குள்ளும் கணியன் பூங்குன்றனுள்ளும் நாம் காண முடியும். வள்ளுவர் வாக்கில் இந்த நெறியை ஒப்புரவு எனச் சொல்லாம். இன்றைய நோக்கில் சமத்துவம் / சமதர்மம் எனச் சொல்லலாம். தமிழர் பண்பாடு என்பதின் மையமென இந்த நெறியை நாம்காண முடியும். பாரி முதலியவர்களை இங்கு உடனே நினைவு கொள்ளலாம். இளங்கோவின் புரட்சி சாத்தனாரின் வறுமை ஒழிப்பு ஆகியவற்றோடு இவற்றை இணைத்துக் காணலாம். கம்பனுக்குள்ளும் இந்த நெறி செயல்பட்டது. இந்த நெறிதான் வள்ளலாருக்குள்ளும் பெரியாருக்குள்ளும் பாரதி மற்றும் பாரதிதாசனுக்குள்ளும் செயல்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்த நெறி ஒப்புரவு சமதர்மம் இந்த நெறி தமிழ்நெறி/தமிழ்மரபு இதுவே தமிழர்களின் மெய்யியல்.

படிப்பகம்

www.padippakam.com



மனிதனை அடிமைப்படுத்தும எல்லா வகை ஆதிக்கத்திலிருந்தும் மனிதனை விடுதலை நோக்கி இயக்குவது இந்த நெறி "நாமார்க்கும் குடியெல்லோம்" என்பது இந்த நெறி. இலக்கியம் முதலியவை குறித்த திறனாய்வுக்கும் இந்த நெறிதான் நமக்கு வழிகாட்டும். வறுமை ஒழிய வேண்டும் அநீதிகள் தீயிட்டு எரிக்கப்பட வேண்டும். சாதி மத வேறுபாடுகள் மனிதர்களைப் பிளவுபடுத்தக் கூடாது. ஊருணி நீரை எல்லோரும் பகிர்ந்து கொள்ளுதல் போல் உழைப்பின் விளைவான செல்வத்தை எல்லோரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு சமுதாயத்தில்தான் நோய்கள் இல்லை. கொடுமைகளுக்கு இடமில்லை "தம்இல் இருந்து தமது பாத்து உண்டு அற்றால் / அம்மா அறிவை முயக்கு" என்ற வள்ளுவர் குறளில் நாம் இந்த பேருணர்வைத்தான் காண்கிறோம். நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின் – படமாடும் கோயில் பரமர்கு அகுதாமே என்ற திருமூலர் வாக்கிலிருந்தும் நாம் தெளிவது இந்த உண்மையைத்தான்.

நெடுங்கால தமிழ் இலக்கியத்தோடு கடந்த ஒரு நூற்றாண்டளவில் எழுதப்பட்டு வெளிவந்துள்ள ஆயிரக்கணக்கான புதினங்கள் மற்றும் சிறுகதை தொகுப்புகள் வழியாகவும் தமிழை நாம் இன்று நமக்கு நெருக்கமாக வைத்துக் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. கதைகள் இல்லாமல் எந்தச் சமூகமும் வாழமுடியாது. தமிழ்ச் சமூகத்தில் சிலப்பதிகாரம் முதலிய காவியங்களினுள்ளும் ஏராளமான கிளைக்கதைகளை நாம் படிக்கிறோம். இக்கதைகள் எல்லாம் நவீன வடிவம் பெற்றுள்ளன. காவிய மரபு தமிழ்ப் புதினங்களுக்குள் ஆளுகை செலுத்தியது மாறி இன்று காவிய மரபிற்கு எதிர் மரபு தமிழ் புதினங்களுக்குள் இடம் பெறுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களுள் காண முடியாத சமூகப் பிரிவுகளும் இம்மக்களின் வாழ்நிலையும் இன்றைய நவீன தமிழிலக்கியத்தினுள் பதிவு பெறுகின்றன. புதுமைப்பித்தன், மௌனி, தி. ஜானகிராமன், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், அசோகமித்ரன், இந்திரா பார்த்தசாரதி, சா. கந்தசாமி, பொன்னீலன், பிரபஞ்சன், வண்ணதாசன் என நூறு படைப்பாளிகளை இன்று எளிதாகக் குறிப்பிட முடியும். தமிழ்ப் புதுக்கவிதை ஆக்கத்தினுள் வைத்து நா. பிச்சமூர்த்தி, பிரமிள், பசுவைய்யா, வைத்தீஸ்வரன், ஞானகூத்தன், அபி, கலாப்பிரியா, தேவதேவன், அப்துல் ரகுமான், சிற்பி, தமிழன்பன், இன்குலாப் என பலரைக் குறிப்பிடமுடியும். வட்டார இலக்கியங்கள் என்ற முறையிலும் தமிழிலக்கியம் வளர்ச்சி கண்டுள்ளது. சண்முக சுந்தரம், கி. ராஜநாராயணன், நாஞ்சில் நாடன் என்று தொடங்கி பலரைக் குறிப்பிடலாம். தலித் இலக்கியம் என்றும் நாம் இன்று காலத்தின் தேவை குறித்து பேசுகிறோம். இத்தகைய படைப்பாளிகளின் வழியே நாம் கற்பது தமிழ் மட்டுமல்ல. தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிக்கல் குறித்தும் கற்கிறோம். தமிழிலக்கியம் மெல்ல, மெல்ல அடித்தள மக்களின் வாழ்க்கை நோக்கி தொடர்ந்து நகர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழிலக்கியங்களில் ஒரு கொந்தளிப்பு நேர்ந்திருப்பதை இன்று உணர்கிறோம். தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டை இன்று சில கோடி தமிழ் மக்களின் வாழ்க்கையை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தும் வாய்ப்பு இன்று நேர்ந்திருக்கிறது. தமிழ் இலக்கணங்கள் இன்று புதிய தடங்களில் நடந்தாக வேண்டும். உலக அளவிலான பொருளியல், அரசியல் சூழலுக்குள் தமிழன் இன்று தள்ளப்படுகிறான். தமிழிலக்கியம்

படிப்பகம்

www.padippakam.com



என்று இன்று பேசும் போது புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்களின் படைப்புகளையும் உள்ளடக்கித்தான் பேசமுடியும். உலகளவில் வைத்து தமிழன் தன்னை இனம் கண்டு கொள்ள நேர்ந்திருக்கிறது. உலக நாகரிகத்திற்கு தமிழனின் நன்கொடைகள் குறித்து இன்று நாம் கண்டு சொல்லவேண்டும். தமிழ் ஒரு செவ்வியல் மொழி என்பதற்கான நியாயத்தை இன்று நாம் நிலைநாட்டவேண்டும்.

இந்திய வரலாற்றிலிருந்து தமிழன் ஒதுக்கப்படுவது குறித்து சிந்திப்பதற்கான தேவை இன்று நமக்கு எழுந்துள்ளது. வள்ளுவனும் இளங்கோவும் கம்பனும் உள்ளவரை தமிழ்ச் சாதிக்கு அழிவில்லை என்று பாரதி நம்பினார். இவர்களோடு பாரதியையும் பாரதிதாசனையும் நாம் உள்ளடக்கிப் பேசமுடியும். தமிழருக்குள் தொடரும் சித்தர் மரபின் மூலம்தான் இன்று தமிழன் தன்னைப் படைத்துக் கொள்ளமுடியும். இத்தகைய ஆய்வுகளை உள்ளடக்கித்தான் இன்று நாம் தமிழ்க் கற்கிறோம்.

9. மிக அண்மைக்காலத்தில் அமைப்பியல் பின் அமைப்பியல் என்றும் நவீனத்துவம் என்றும் பின் நவீனத்துவம் என்றும் சில புதிய ஆய்வுமுறைகள் நமக்கு அறிமுகமாகியுள்ளன. தமிழவன் தொடங்கி அ. மார்க்ஸ் வரை பலர் இந்த நெறிகளை நமக்கு அறிமுகப்படுத்தி வருகின்றனர். இலக்கியத்தினுள்ளும் அதிகாரம் செயல்படுகிறது. அரசியல், பொருளியல், மதம், பண்பாடு முதலியவற்றினுள்ளும் செயல்படும் இந்த அதிகார மையத்தை வெளியேற்ற வேண்டும் ஆணுக்குப் பெண் அடிமையில்லை. சாதிய முறையில் செயல்படும் ஆதிக்கத்திற்கோ, அடிமைத்தனத்திற்கோ இடம் இல்லை. இலக்கியம் மட்டுமல்லாமல் எந்தவொரு படைப்பும் அந்தப் படைப்பாளி மூலம் வெளிப்படுவதுதான். சமூகம்தான் இவ்வாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இலக்கியத்தைப் படைத்தவன் இப்பொழுது இல்லை வாசகன் தனக்குரிய முறையில்தான் இதைப் பொருள்படுத்துகிறான். இவனுக்குள்ளும் கலைஞன் இருக்கிறான். மூலப்படைப்பாளி என்று எவரையும் சொல்வதற்கில்லை வாசகன் கையில் இருப்பது அவனுடைய பிரதி ஆதிக்கங்களை வெளியேற்றிய நிலையில் தான் எல்லாக் களங்களிலும் சமத்துவம் சாத்தியப்படும்ஆதிக்கங்களினால் விளிம்பில் தள்ளப்பட்ட மனிதர்கள் ஆதிக்கங்கள் தகர்ந்த நிலையில்தான் சமத்துவ நெறியில் மனிதர்களாக முடியும். இப்படிச் செல்கின்றன புதிய அணுகுமுறைகள். தமிழ் மரபுக்கு தமிழ் மெய்யியலுக்கு ஆக்கம் தரக் கூடியவை இந்த ஆய்வு நெறிகள் இன்று தமிழ்க் கல்வியை சரியாகப் பயில்வதற்கு இந்தப் புது நெறிகள் பெரிதும் பயன்படும்.

இறுதியாக இப்படிச் சொல்லலாம் பாரதிதாசன் தமிழ் தனக்கு உயிர் என்றார். நமக்கும் தமிழ்தான் உயிர். தமிழுக்குள்ளிலிருந்து இந்த உயிர் இயக்கத்தை நாம் பெறவேண்டும். தமிழைப் புதியதாக புது நெறிகள் மூலமாகக் கற்கும்போதுதான் இந்த உயிர் இயக்கத்தை நமக்குள் மேம்படுத்திக் கொள்ள முடியும். வரலாற்றில் நம்மை தக்கவைத்துக் கொள்வது தமிழ்நெறிதான் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" – பாரதிதாசன்.

குறிப்பு : கோவை பாரதியார் பல்கலைக்கழக தமிழ்த்துறை ஏற்பாடு செய்த – ஆத்துப் பொள்ளாச்சி தர்மராசு – செல்லம்மாள் அவர்கள் நிறுவிய அறக்கட்டளையின் கீழ் ஞானி ஆற்றிய உரை.

படிப்பகம்

www.padippakam.com



## முப்பாட்டனின் வீடு

முப்பாட்டனின் மரணத்திற்குப் பின்பு
தூக்குப்போட்டு நாக்குத்தள்ளிச் செத்துப்போனார் பெரியப்பா
விளைச்சல்களைச் சாகடித்த மருந்துக்களின் அந்நியத்தால்

அம்மா அடுப்படியில் மூக்குச் சிந்தி நிற்கிறாள்
கடன்பட்டு கைநழுவிப்போன முப்பாட்டனின்
பரந்த பூமியை நினைவுக்குள் இழுத்தபடி . . .

அப்பன் வழுக்கைத் தலையில் கைவைத்தபடி
பீடி புகைக்கிறார் இருமிக்கொண்டு
பயம் இல்லாவிட்டால் சாவு நிகழ்ந்திருக்கும்

கிராமங்களைப் பாடிக்கொண்டு இருப்பின் நிச்சயத்தோடு
இதோ . . . இந்த வழியாகத்தான் வயலுக்குப் போவார் முப்பாட்டன்

நடைபாதையெங்கும் அமர்ந்திருக்கும்
மார்வாடிகளையும் வட்டிக்கடைகளையும் தாண்டி
குத்தகைக்காரனிடம் தென்னை ஓலைகள் பின்னப்போகிறேன் நான் . . .

அடமானம் வைத்த முப்பாட்டனின் வெண்கல வெற்றிலைப் பெட்டியை
இந்த மாதமாவது மீட்டு விடவேண்டும் . . . !

— பாலைநிலவன்

## வரப்பெற்றோம் நன்றி

1. இந்திய விடுதலை எழுச்சியில் தூத்துக்குடி
ஆசிரியர் : எழிலமுதன்
மணிமேகலை பிரசுரம், சென்னை – 17. ரூ.23/–

2. சுதேசம் (சிறுகதை தொகுப்பு)
ஆசிரியர் : கா.சு. வேலாயுதம்
குமரி பதிப்பகம், நாகை. ரூ. 40/–

3. பனிப்பாறை நுனிகள் (கவிதைகள்)
ஆசிரியர் : தங்கப்பா
வானகப் பதிப்பகம், புதுவை – 8. ரூ. 30/–

4. வெள்ளை யானை (கவிதைகள்)
ஆசிரியர் : முருகு சுந்தரம்
அன்னம், சிவகங்கை – 61. ரூ. 22/–

5. உயிர் நிழல் (முதல் இதழ்) – பாரிசு

6. எச்சில் (இதழ் 4) – பாரிசு

7. உயிரியல் புரட்சியின் ஒடுக்குமுறைகள்
ஆசிரியர் : மு. பாலசுப்பிரமணியன்
ஜி–5/10, காவேரி நகர், திருச்சி – 12. ரூ. 20/–

படிப்பகம்

www.padippakam.com



# சமூக அறிவர் அரங்கம்

## இரண்டாவது சந்திப்பு அறிக்கை

நாள் : 21 பிப்ரவரி 99

இடம் : காந்தி கிராம கிராமியப் பல்கலைக் கழகம், திண்டுக்கல்

ஒருங்கிணைப்பு : கோ. நம்மாழ்வார்

### பேரா. மார்க்கண்டன் துணைவேந்தர் :

புதிய பொருளாதாரக் கொள்கை முற்றிலும் எதிரானது என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. மையப்படுத்தலை நாம் எல்லாவற்றிலும் எதிர்க்க வேண்டும். மத்திய மாநில அரசுகள்போல உள்ளாட்சியும் ஒரு தனி அரசு என்கிற நிலை உருவாக வேண்டும். புதிய தலைமைகளும் விழிப்புணர்வும் உடனடித் தேவை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் செயல்பட்டு, வல்லுநர்களாக ஆக வேண்டும். காந்தியின் அணுகுமுறை இன்று எல்லோராலும் போற்றப்படுகிறது. "யார் எனக்கு நேரே எனது கொள்கைகளை விமர்சிக்கின்றனரோ அவர்கள்தான் எனது கொள்கைகளை உணரமுடியும்" என்றார் காந்தி.

சர்வோதய சங்கத்தவர்களுடன் இணைந்து நாம் பல நல்ல செயல்களைச் செய்ய முடியும். உதாரணமாக நாட்டுச் சர்க்கரையை விற்பதற்கு கிராமியப் பல்கலைக் கழகம் தயாராக உள்ளது. இன்றும் இதுபோன்ற பல்வேறு பொருட்களை காந்திய அமைப்புகள், சர்வோதய அமைப்புகளுடன் இணைந்து செய்யலாம்.

### ஜீவா :

கேரளத்தில் சாலி ஆறு என்று சொல்லப்படுகிற ஆறு உள்ளது. அதன் கரையிலே பிர்லாவினுடைய ஒரு ரேயான் தொழிற்சாலை இருக்கிறது. இது சாலியாறு ஆற்றையும், காற்றையும் கெடுத்துக் கொண்டு இருக்கிறது. தொழிற்சாலையின் மாசுபாட்டை எதிர்த்து 35 ஆண்டுகளாகப் போராடி வந்த கே.ரஹ்மான் என்று அழைக்கப்படுகிற சுற்றுச்சூழல் போராளி புற்று நோயால் இறந்து போனார்.

பவானி ஆறும் சாலியாறும் இரண்டும் சகோதரிகள். இரண்டு ஆலைகளால் மாசுபடுத்தப்படும் சகோதரிகள். ஆகவே, நம்மிடையே இணைந்த செயல்பாடு தேவை. மேற்குத் தொடர்ச்சி மலை என்பது மொழி, மாநில வேறுபாடுகளைக் கடந்து தென்னக மக்களின் வாழ்வுக்கான ஆதாரம் என்ற கருத்தைக் கேரளத்திலும் கர்நாடகத்திலும் தமிழகத்திலும் உள்ள அனைத்து மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று பேசுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது. கேரள சூழல் ஆர்வலர்கள் நம்முடன் இணைந்து செயல்பட முன்வந்திருப்பது நம்பிக்கை தரும் தகவல்.

### பேராசிரியர் பழனித்துரை :

இண்டர்நெட் யுகமான இன்று நமது உரிமைகள் பறிபோக வாய்ப்புகள் பெருகியுள்ளன. இணையத் தளங்கள், வழிவழிவந்த அறிவு முறைகள் என்கிற பெயரில் விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலைநாடுகளுக்கு இணையாக பொருட்களை உற்பத்தி செய்ய நம்மாலும் முடியும். மருத்துவத்தைப் பொறுத்தவரை நோய்களைக் கண்டறிவது என்பது வரையில்தான் அவர்களது தொழில்நுட்பம் உள்ளது. குணமாக்குவது என்று தொடங்கினால் சித்தாவுக்கோ, ஹோமியோபதிக்கோதான் திரும்ப

படிப்பகம்

www.padippakam.com



வேண்டியுள்ளது. எனவே, அங்கு அல்லோபதியை நிறுத்திவிட்டு சித்த மருத்துவ சூரணங்கள் வரவிருக்கின்றன. அதற்காக தயாரிப்பு முறைகள் பற்றிய விவரங்களை நம் நாட்டிலுள்ள அறிவாளிகள் (!) விற்பனை செய்யத் துவங்கி விட்டனர். (Indegenius knowledge In India-Maharishi Maha Yogi) என்ற பெயரில் இணையத் தளத்தில் மருத்துவமுறைகள் கிடைக்கின்றன.

## அந்தோணிசாமி - தமிழ்நாடு சுற்றுச்சூழல் கழகம் :

என்னைப் பொறுத்தவரை இந்த அரங்கத்தில் அசலான செய்திகள்தான் பேசப்பட்டன. ஆனால் அதற்கு மாற்றுகள் என்று பெயர் சொல்கிறோம். ஏரிப்பாசனம் நமக்குப் பரிச்சயமான ஒன்று. ஒரு ஏரிக்கும் அடுத்த ஏரிக்கும் இணைப்பு உண்டு. பெரிய அணைக்கட்டுகள் என்பது நமக்கு வெளியில் இருந்து வந்த தொழில் நுட்பம். பெரிய அமைப்பாக எது இருந்தாலும் அது தீமை செய்யும். இந்த அமைப்பிலே உறுப்பினராக இருக்கும் அமைப்புக்கள், தங்கள் அமைப்பின் மூலம் சமூக அறிவர் அரங்கத்தின் கருத்துக்களை எடுத்துச் செல்லவேண்டும் என விரும்புகிறேன். பெண்களின் பங்கெடுப்பை அதிகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஊரில் கூடுவதற்குப் பதில் அந்தந்த மாவட்டங்கள், அல்லது குறிப்பிட்ட மண்டலங்களாகப் பிரித்து ஆங்காங்கே உள்ள சிக்கல்களைப் பற்றி ஆங்காங்கே விவாதிக்கலாம். தீர்வு காணலாம்.

## பழனித்துரை :

உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலம் மக்களின் சிக்கல்களை நாம் இனம் காணமுடியும். உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது தலைவர்களாக இருப்பவர்கள் மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்க விரும்புகிறார்களா என்றால் இல்லை. எனவே, தமது அதிகாரம் என்ன என்பதை மக்களே உணர வைக்கவேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் மூன்றாவது அரசாங்கமாக உருவாகி வருகின்றன.

மாற்றுவழி பற்றி இங்கு பேசிய நண்பர்கள் கூறினர். மாற்றுவழியை அரசு அதிகாரிகளிடம் நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் ஒரு இயக்கமாக மிகவும் பலம் பொருந்திய இயக்கமாக வளரும்போது மட்டுமே இது சாத்தியமாகும்.

## பிரகாசம் : வழக்கறிஞர் பட்டுக்கோட்டை :

செய்திகளை மக்களிடம் கொண்டு செல்வதிலும் கீழ்மட்டத்திலே அமைப்புகளைக் கட்டுவதிலும் பெரிய இடைவெளி இருக்கின்றது. காந்தி, சேவையையும் அரசியலையும் சமூகம் பொருளாதாரத்தையும் ஒருங்கிணைத்தார். காந்தி வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல. காந்தியால் எப்படி மக்களைச் சென்றடைய முடிந்தது? மக்களை எப்படி அவரால் திரட்ட முடிந்தது.

நாங்கள் கிராமங்களில் சில பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். உனது ஊரின் மக்கள் தொகை எவ்வளவு? என்று பஞ்சாயத்துத் தலைவரைப் பார்த்துக் கேட்டோம். தெரியாது என்றார். ஊரின் பரப்பளவு தெரியாது. இதையே கடைத்தெருவில் போய்க் கேட்டோம். அங்கும் தெரியாது என்று பதில் வந்தது.

சொந்த விஷயங்களைத் தெரிந்து கொள்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பரிசோதனைகளை எங்கள் ஊர்களில் செய்து வருகிறோம். இதைத் தொடங்கி ஒரு மாதம்தான் ஆகின்றது. ஒரு கூட்டுறவு வங்கியின் வரவுசெலவு பற்றி வங்கிச் செயலருக்குத் தெரியவில்லை. எவ்வளவு கடன் கொடுக்கிறான் என்று தெரியவில்லை. மத்திய மாநில பட்ஜெட்களைப் பற்றிப் பிறகு அறிந்து கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



நமது ஊர்ப் பஞ்சாயத்து அமைப்பின் வரவு செலவு என்ன என்பதை முதலில் தெரிந்து கொள்வோம். இது தொடர்பான கேள்வித்தாள் ஒன்றைத் தயாரித்து விடைகளை அறிய முயன்று வருகிறோம்.

## வெள்ளைச்சாமி : ஒல்லியல் மருத்துவர் (ஹோமியோபதி)

இன்று வேளாண்மைக்கு உரம் என்று சொல்லப்படுகிற நஞ்சு தயாரிப்பவன்தான் மனிதர்களுக்கும் மருந்து தயாரிக்கிறான். இது எவ்வளவு சூழ்ச்சியான காரியம். இன்று மக்களுக்கு வரும் நோய்களால் 90 சதம் உணவுப் பொருட்களாலும் சூழல் பாதிப்பாலும் வருகிறது. இந்த வேளாண்மை முறை மாற்றப்படவேண்டும். இன்று சூழல் பாதிப்படைந்துள்ளது. இயற்கையை நாம் புறக்கணித்துவிட்டோம். இயற்கை வேளாண்மை செய்யும் போதும், இயற்கையோடு இயைந்து வாழும் போதும் மட்டுமே ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும்.

வள்ளுவர் மருத்துவம் பற்றிச் சொன்ன 10 குறள்களில 7 குறள்கள் உணவைப் பற்றிக் கூறுகிறார். இன்று நாம் உண்ணும் உணவு முழுவதும் நஞ்சு கலந்தது. எனக்குப் பத்து வயது இருந்தபோதெல்லாம் எங்களது ஊரில் யாருக்கும் அல்சர் வந்தது கிடையாது. இன்று நோய் இல்லாத ஆட்களை எண்ணிவிடலாம். இன்றைக்கு மருத்துவம் மிகப் பெரிய தொழிலாகிவிட்டது.

காற்று இல்லையென்றால் 30 வினாடிகள் நம்மால் உயிரோடு இருக்கமுடியாது, உயிருக்கு ஆதாரமான காற்று இன்று மாசுபடுத்தப்படுகிறது. தண்ணீர் இன்று பாக்கெட்டில் விற்கப்படுகிறது. முன்பு உணவே நமக்கு இனாமாகக் கிடைத்தது. இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. எவையெல்லாம் வாழ்வதற்கு அவசியமில்லையோ அவைகளின் விலை அதிகமாக உள்ளது. தங்கம், வைரம் இவைகளே நல்ல உதாரணம்.

மருத்துவம் அத்தியாவசியமானது. இது எளிமையாக மக்களுக்குக் கிடைக்கவேண்டும். எப்போது கிடைக்குமென்றால், இயற்கை வேளாண்மை செய்து சூழலைத் தூய்மையாக வைத்திருக்கும்போது மட்டும்தான் கிடைக்கும். விலங்குகள் தமக்கு நோய் வரும்போது குறிப்பிட்ட மூலிகைககளைத் தாமே உண்ணும். அவைகள் எந்தக் கல்லூரியிலும் படிக்கவில்லை.

நாம் இன்று இயற்கையிலிருந்து அன்னியப்பட்டுப் போய் இருக்கிறோம். இன்று எல்லோரும் மருத்துவர் ஆக முடியும். 3000 ஆண்டுகளுக்கு முன்பு போகர், சித்தர் சொன்னவைகள்தான் இன்றும் என்றும் உண்மை. ஏனென்றால் இயற்கையோடு இயைந்ததாக அவர்களின் தத்துவம் இருந்தது. இன்று எவ்வளவோ தொலைத் தொடர்புச் சாதனங்கள் வந்துள்ளன. இவற்றைக் கொண்டு வீட்டிலிருந்து கொண்டே மருத்துவம் படிக்கமுடியும்.

மருத்துவம் என்பது இன்று மக்களிடமிருந்து அன்னியப்பட்டு உள்ளது. மருத்துவம் என்பது ஒரு வாழ்க்கை நெறி. அன்றாட வாழ்வில் இரண்டறக் கலந்தது. இயற்கையோடு இணைந்தது. ஒவ்வொரு பொருளும் தன்னைச் சுற்றியுள்ள பொருட்களோடு இடையறாத உறவு கொண்டுள்ளது. அந்த இடையுறவின் மூலம் தான் மாறுவது மட்டுமல்லாமல் பிறவற்றையும் மாற்ற முடியும். மாற்றம் என்பதுதான் நோய், மாற்றம் என்பதுதான் ஆரோக்கியம், மாற்றம் என்பது தான் வளர்ச்சி.

எங்க ஆத்தா படிக்காதது. அ, ஆ தெரியாது. எனக்குத் தெரிஞ்சு நூற்றுக் கணக்கான குழந்தைகளை அது காப்பாற்றியுள்ளது. "இதையெல்லாம் எங்கு படித்தாய்" என்றேன். "இதை எங்கு போய் படிக்கவேண்டும். இது என்னோடே வந்ததுடா" என்றார். சளி பிடித்துக் கொண்டதா, வயிறு வலிக்கிறதா. குறுமிளகு எடுத்து வெற்றிலையில் கசக்கி வயிற்றில் தடவு சரியாகிவிடும். "இதையெல்லாம் எங்கிருந்து படித்தாய்?"

படிப்பகம்

www.padippakam.com



"எங்க தாத்தா, செஞ்சது பாட்டி செஞ்சது பிறகேன் தனியாகப் படிப்பு" நமது மருத்துவம் இயற்கையோடு இயைந்ததாக, நமது இரத்தத்தோடு கலந்ததாக இருந்தது. இன்றைய நிலையில் மருத்துவமென்றால், ஓமியோபதியையும், சித்த மருத்துவத்தையும் தேடித்தான் உலகம் வரவேண்டும். ஆங்கில மருத்துவத்தில் தீர்வு கிடையாது.

## திரு. செல்லப்பன் :

பசுமைப்புரட்சி வந்தபிறகுதான் உற்பத்தி பெருகியது என்பது பெரிய பொய். பாசன வசதிகளைப் பெருக்கி மானாவாரி நிலங்களையும் சாகுபடிக்குக் கொண்டு வந்ததாலேயே இது சாத்தியமாயிற்று. வீரிய வித்துக்கள் என்பது உண்மையானால், அதற்கு முன்பு நம்மிடம் இருந்தவை சோதா வித்துக்களா?. நெல்லில் புல்லைக் குறைத்து நெல்லைக் கூட்டியிருக்கின்றனர். நிகர விளைச்சல் மாறவில்லை. இரசாயன நஞ்சுகளால் உணவு நஞ்சாகிவிட்டது. ஒரு சிறு கும்பலுக்காக விஞ்ஞானம் என்கிற பெயரில் பெரிய மோசடி நிகழ்ந்துள்ளது. வளர்ச்சி, வளர்ச்சி என்று கூச்சல் கிளப்பப்படுகிறது. யாருடைய வளர்ச்சி? என்றுதான் கேள்வி கேட்க வேண்டியுள்ளது.

## சேதுபதி : 'தொடரும்' பத்திரிக்கையாளர்

இனி சமூக மாற்றத்துக்காகப் போராடும் தகுதி விவசாயிகளிடம்தான் இருக்கிறது. இனி, இழப்பதற்கு எதுவுமே இல்லை எனும் நிலையில இருப்பவர்கள் அவர்கள்தாம்.

அடுத்து மீடியா பற்றிச் சொன்னார்கள். அவற்றின் இலக்கு பெண்கள் என்பதெல்லாம் போய் குழந்தைகள் என்பதாகியிருக்கிறது. நுகர்வியம், உலகமயமாதல் நிலைகளில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகளே! விளம்பரங்கள் யாவும் அவர்களை நோக்கியே குறி வைக்கப்படுகின்றன. அதிலிருந்து அவர்களை மீட்டு, சுற்றுப்புறச்சூழல் குறித்த துறைக்கு ஆற்றுப்படுத்தவேண்டும்.

பொதுவாக, இன்றைய குழந்தைகளிடத்தில் இத்தகு விழிப்புணர்வு மிகுந்திருக்கிறது.

"அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில் லாதவர்"

எனும் குறள் படிக்கும் மாணவி ஒருத்தி, 'மரம்' என்றால் அவ்வளவு இழிவா? எனக் கேள்வி எழுப்புகிறாள்.

அடுத்து பொதுத் தொடர்பு சாதனங்கள் மீதான அதிருப்தியில், சமூக மாற்றத்தை அவாவி இயங்கும் சிறு சிறு குழுக்கள், சிறு பத்திரிகையாளர்கள் யாவரிடத்தும் இத்தகவல்கள் பரவலாக வேண்டும்.

இயற்கை வேளாண்மை, சித்தமருத்துவம், சுற்றுப்புறச்சூழல், தாய்மொழிக்கல்வி நான்கும் ஒன்றோடொன்று தொடர்புடையது எனத் தெளிந்தோம். இதில், தாய்மொழிக்கல்வி என்பது வெறும் மொழி சம்பந்தப்பட்டதன்று. தமிழர்தம் வாழ்வு சம்பந்தப்பட்டது.

தமிழர் தம் வாழ்வியலில் பெரிதாக இடம் பெறும் சமய வாழ்க்கை அடிப்படையில் இயற்கை சார்ந்தது. 'சோலையாண்டவர் ஏரிகாத்த ஐயனார்" முதலிய சிறு தெய்வ வழிபாட்டின் செயல்பாடுகளில் சூழல் பேணப்பட்டது. பின்னர் செழித்த பெருந்தெய்வ வழிபாட்டு முறைகளில், தலவிருட்சங்கள் இடம் பெற்றன. முன்பு நந்தவனங்கள் பேணப்பட்டன. விலங்குகளைத் தெய்வங்களின் வாகனங்களாக கருதிப் போற்றினர்.

திருவையாற்றில் 'கடவுளைக் கண்டேன்' எனப் பாடிய அப்பர், காதல்

படிப்பகம்

மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன் என்கிறார். பறவைகளும், விலங்குகளும் ஏனைய உயிர்களும் தத்தமது துணைகளுடன் இன்புற்று வாழும் நிலையையே இறையியல்பாகக் கண்டார். தேவார, திருவாசகங்களில், ஆழ்வார் பாசுரங்களில் எல்லாம் இயற்கைச் செழுமையை மிகுதியும் காணலாம். சங்க இலக்கியம் முழுவதும் அஃதே.

**ஞானி :**

சமூக அறிவர் அரங்கத்தில் மையமாக இருக்கப்போவது இயற்கை வேளாண்மை, சுற்றுச் சூழல் காப்பு, பசுமை இயக்கங்கள் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. தாய்த்தமிழ்ப்பள்ளி, சித்த மற்றும் ஒல்லியல் மருத்துவம் என்பதையும் இதோடு இணைக்கவேண்டுமென்று இங்கு பேசப்பட்டது. ஆக இந்த ஐந்து வகை கருத்துத் தொகுப்பும் செயல்பாடுகளின் மையமாக இருக்கப் போகின்றது எனத் தோன்றுகிறது.

இங்கு நாம் தலைவர்களை உருவாக்கப் போவதில்லை எல்லோரும் இணைந்து நாம் செயல்படுவது அவசியம். இங்கே விவாதிக்கப்பட்ட கருத்துக்களை MLAக்களுக்கு அனுப்பி வைப்போம். ஊராட்சித் தலைவர்களுக்கு அனுப்புவோம். பத்திரிக்கைகளில் வெளியிட முயற்சி மேற்கொள்வோம். அரசோடு தொடர்பு கொண்டு ஏதேனும் சாதிக்க முடியுமென்ற கற்பனையெல்லாம் நமக்கு வேண்டியதில்லை. அரசுக்கு என்று தீர்க்கமான சில கொள்கைகள் உண்டு. தமிழைக் காப்பாற்றுவது அரசின் கொள்கையல்ல, மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவது அரசின் கொள்கையல்ல. இயற்கையைப் பாதுகாப்பது அரசின் கொள்கையல்ல. பாதுகாப்பதாக சொல்லிக் கொள்வார்கள் அவ்வளவுதான்.

உள்ளாட்சியைப் பற்றி நாம் மிகுந்த அக்கறையோடு இருக்கவேண்டும். நமது நோக்கங்கள் ஏதாவது நிறைவேற்ற முடியுமென்றால் அது கிராமங்கள் வழியாகத்தான். ஏழை மக்கள் வழியாகத்தான். நமது எழுத்து வடிவங்கள் முதலியவை நடுத்தர வர்க்கத்தினருக்கானவை.

**பெ. தங்கசாமி, கற்பகச் சோலை :**

பொன்விழாக் கொண்டாடுகிறோம். இதற்கான சுதந்திரத்தைப் பெற போராடிய மாபெரும் தலைவர்களை நம் அரசியல்வாதிகள் ஏமாற்றிவிட்டார்கள். அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நாட்டைக் கொள்ளை அடிக்கிறார்கள். அன்னியர்களுக்கு அடிமைப்படுத்துகிறார்கள். கங்கை காவிரியை இணைத்திருக்க வேண்டும். இதற்கு மாறாக காடுகளை அழிக்கிறார்கள். இயற்கையை நாசம் செய்கிறார்கள். பெற்ற சுதந்திரம் பறி போகிறது. இரண்டாவது சுதந்திரப் போரை நாம் தொடங்கவேண்டும். இளைஞர்கள் முன்வரவேண்டும். காடு வளர்த்தால் நாடு வளரும். பொருளாதாரம் வளம் பெறும். வாழ்க்கை இயற்கை மயமாகும். வேளாண்மை என்பதனுள் பொருளாதாரம் மட்டுமல்ல கலாச்சாரமும் அரசியலும் இருக்கின்றன. கற்பகச்சோலைக்கு நீங்கள் வரவேண்டும். வந்து பார்த்தால் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படும்.

**நம்மாழ்வார் :**

நாம் பலம் வாய்ந்தவர்கள். நம்மோடு 'தமிழ்நேயம்' இருக்கிறது. 'பசுந்தளிர்' இருக்கிறது. துளிர் உயிர் உரம் தயாரிக்கும் செல்வம் இருக்கிறார். பெண்உரிமை இயக்கங்கள் இருக்கின்றன. மலைவாழ் மக்கள் இயக்கம் இருக்கிறது. தமிழகப் பசுமை இயக்கம் இருக்கிறது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் சங்கம் இருக்கிறது. அமைதி அறக்கட்டளை இருக்கிறது. இவ்வளவும் தனித்தனியே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒன்றாக்க வேண்டுமென்று நாம ஆசைப்படவில்லை. ஆனால் செயல்பாடுகளில் ஒருமித்த கருத்து இருப்பதை உணர்கிறோம்.

www.padippakam.com



நாம் செயல்பட ஏராளமான வேலைகள் உள்ளன. ஒவ்வொரு ஊரிலும் ஒரு தாய்த்தமிழ்ப் பள்ளியை நாம் உருவாக்க முடியும். இங்கு பேசியவர்கள் தெளிவாகவே குறிப்பிட்டனர். இதற்கு ஒன்றும் அதிகம் படிக்க வேண்டியதில்லை என்று. நான் திருநெல்வேலி பகுதியில் வேலை செய்யும் போது அங்கு ஒரு ஊராட்சித் தலைவர் இருந்தார். நல்ல சமூக ஆர்வலர். நான் அவரிடம் "எத்தனையாவது வரை படித்துள்ளீர்கள்?" என்றேன். "நான்காவது வரை" என்றார். "ஏன் நாலாவதோடு நிறுத்திவிட்டீர்கள்?" "எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் ஐந்தாவது வரைதான் படித்திருந்தார்" என்றார்.

ஊருக்கு ஒரு பள்ளியல்ல. தெருவுக்கு ஒரு பள்ளியை நாம் உருவாக்கமுடியும். கல்வி அறிவு அற்றவர்களே இல்லை என்ற நிலையை உருவாக்க இதைப் போன்ற ஒரு இயக்கம் அக்கறையோடு செயல்பட்டால் வெற்றி பெறலாம். இதை நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

அடுத்ததாக மருத்துவத்தில் நாம் கவனம் செலுத்தவேண்டும். ஒல்லியல் மருத்துவர் வெள்ளைச்சாமி இங்கு சிறப்பாகப் பேசினார். மருத்துவர்களை உருவாக்குவது மிகவும் எளிது. உதவி தேவையென நான் கேட்டுக்கொண்டால் உடனே பையை எடுத்துக் கொண்டு மருத்துவம் செய்துவிட்டு வரக்கூடிய மருத்துவர்கள் பத்துப் பேர் இருக்கின்றனர். எந்த ஆங்கில வைத்தியன் தீர்க்க முடியாத நோய்களையும் தீர்த்து வைக்கும் ஆற்றல் மிக்கவர்கள் அவர்கள். எனவே, இத்தகைய மருத்துவ வல்லுநர்களை எப்படி முறைப்படுத்தி ஒருங்கிணைத்து செயல்படுவது என்று நாம் சிந்திக்க வேண்டும்.

அடுத்ததாக உயிர் சக்தி வேளாண்மை நண்பர்கள் இங்கு இருக்கின்றனர். மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த இவர்கள் பல சோதனைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளனர். அதேபோல செல்வம் 'துளிர்' எனும் உயிர் உரம் தயாரித்து வழங்குகிறார். பல பத்தாண்டுகளாக இரசாயனங்களைக் கொட்டி நமது நிலம் உயிர்த் தன்மையை இழந்து கெட்டித் தரையாகிவிட்டது. ஒரு பழைய பிரஷர் குக்கரைக் கொண்டு எவ்வாறெல்லாம் செலவின்றி உர உயிர்களைத் தயார் செய்வது என்று பயிற்சி கொடுக்கவும் தயாராக உள்ளார்.

எனவே, நம்மிடம் நிறைய சக்தி இருக்கிறது. ஆதாரம் இருக்கிறது. பலதுறை வல்லுநர்கள் இருக்கின்றனர். எப்படி இவர்களை ஒருங்கிணைப்பது என்று முடிவு செய்யவேண்டும்.

அடுத்ததாக நாட்டுச் சர்க்கரை பற்றி இங்கு சொன்னார்கள். நாட்டுச் சர்க்கரை என்று சொல்வதைவிட இரும்பு சர்க்கரை என்று சொல்லலாம். இதில் இரும்பு இருக்கிறது. நமது இரத்தத்தில் இருக்கவேண்டிய முக்கியமான பொருள் இரும்பு. நமது இரத்தத்தில் இரும்பு சேர்ந்தால்தான் நாம் உறுதியுடன் இருக்கமுடியும். இதற்கு சிவப்பு சர்க்கரை அதாவது இரும்பு உள்ள சர்க்கரை நமது உணவில் சேரவேண்டும். இரும்பை நீக்கிய வெள்ளைச் சர்க்கரை சத்தற்றது மட்டுமல்ல நஞ்சும், நிறைந்தது.

இதற்கு மேலும் ஒரு செய்தி இதில் உள்ளது. பன்னாட்டு கம்பெனிகள் இன்று என்ன நினைக்கின்றன. கரும்பிலிருந்து இனிமேல் சர்க்கரை தயாரிக்கக் கூடாது. வேறுநாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற சர்க்கரையை இந்தியாவில் விற்கவேண்டும். இங்கு உற்பத்தியாகிற சர்க்கரையில் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்க வேண்டுமென எண்ணியுள்ளன. (சர்க்கரை மூலக்கூறு அமைப்பில் சிறுமாற்றம் செய்தால் இரும்பு பிளாஸ்டிக்காக மாறிவிடுகிறதாம்) எனவே கரும்பு கொடுக்கிற விவசாயிக்கு திருப்பி பிளாஸ்டிக்கையை தரப் போகின்றனர். எனவே மிகப் பெரிய அபாயத்தை நாம் எதிர் நோக்கியுள்ளோம்.

ஊருக்கு ஊர் ஆலைபோட்டு நாமே வெல்லம் தயாரித்துக் கொள்வது எப்படி? நாமே பயன்படுத்திக் கொண்டு மீதியாவதை மட்டும் விற்பது எப்படி? என்றெல்லாம் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்துச் செயலில் இறங்கவில்லையானால் கரும்பாலைகளால் ஏற்படும் சூழல் நாசமும், உடல் நலக்கேடும் அதிகரிக்கும். அது

படிப்பகம்

www.padippakam.com



மட்டுமல்லாமல், நமது நிலத்தடி நீரை உறிஞ்சி, 40 டன் 50 டன் என்று கரும்பாகக் கொடுத்தால் வெள்ளையான நஞ்சை திருப்பித் தருகின்றனர். இதெல்லாம் போக நம் மீது இன்னொரு சுமையையும் ஏற்றுகின்றனர். நீங்கள் கொடுப்பதைவிட பாகிஸ்தான் மலிவான விலையில் சர்க்கரையைத் தருகிறது என்கின்றனர்.

இதுமாதிரி உலக வணிகம் நம் அத்தனைபேரின் தலையையும் தடவக்கூடிய வேலையைச் செய்து வருகிறது. அடுத்ததாக விதை பற்றிச் சொல்ல வேண்டும். விதை என்று சொல்லும் போது நெல் மற்றும் தானியம் மட்டுமல்ல கால்நடைகளும் விதைகள்தான். நமது ஊர் சிவன் கோவிலில் படுத்திருப்பவைதான் நமது நாட்டுக் கால்நடைகள். அதன் முதுகில் திமிழ் இருக்கிறது. அதுதான் நமது பூமிக்குரிய சிறப்பு. அதே மாடு, காங்கேயத்தில் ஒருமாதிரி இருக்கிறது. மணப்பாறையில் ஒரு மாதிரி இருக்கிறது. திருவண்ணாமலையில் வேறு மாதிரி இருக்கிறது. ஒசூரில் வேறுமாதிரி இருக்கிறது. ஓங்கோலில் ஒரு மாதிரி இருக்கிறது. குஜராத்தில் இன்னொரு மாதிரி இருக்கிறது. அந்தந்த சூழல் அந்தந்த சூழலுக்கேற்ற கால்நடைகளையும் மனிதர்களையும் இன்று பல்வேறு வித்துக்களையும் உற்பத்தி செய்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகள் பற்றி இங்கு பேசியவர்கள் நல்ல கருத்துக்களைக் கூறினார்கள். கிராமசபை என்கிற ஒன்று எங்கும் ஏற்படுத்தப்படவில்லை. அண்மையில் ஒரு அமைச்சரோ, அதிகாரியோ சொன்ன கருத்தை இங்கு சொல்ல விரும்புகிறேன். "ஓட்டுப் போடாதவர்களைத் தண்டிக்கவேண்டும்" இது அவர் சொன்னது. இவர்கள் எவ்வளவு பெரிய உத்தமர்கள். காந்தியவாதிகளோடு நான் பேசினேன். காந்திய வழியில் ஊர் மக்கள் எல்லாம் சேர்ந்து பெரிய அறிவிப்பு கொடுத்து தட்டி எழுதி வைத்துப் போடலாம். இங்கே வேட்பாளர்களாக இருக்கின்ற யாருக்கும் எங்களுக்கு உறுப்பினராக இருக்கும் தகுதி இல்லை. எனவே வாக்களிக்க எங்களுக்கு விருப்பமில்லை என்று சொல்லமுடியும்.

நண்பர் குருசாமி அவர்கள் சொன்னார் "சட்டத்திற்கும் புறம்பாக பல செயல்கள் செய்கின்றனர் அதையும் இந்த அரசாங்கம் எடுக்கவேண்டும்" நான் அதற்கு மேலே சொல்கிறேன். சட்டமாகவே இருந்தாலும் அது இந்த சமூகத்திற்கு எதிராக இருக்குமானால் அதை எதிர்த்தும் போராட இந்த அரங்கம் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். இது தொடர்பாக அடுத்தடுத்து வரும் அரங்கத்தில் விவாதித்து செயலில் இறங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**தொகுப்பு : மு. குமரவேல்**

(குறிப்பு : சமூக அறிவர் அரங்கத்தின் அடுத்த அமர்வு ஏப்ரல் 11ம் நாள் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகிலுள்ள சேந்தன்குடி கிராமத்தில் தங்கசாமி அவர்களின் "கற்பகச்சோலை" பண்ணையில் நடைபெறும்)

பிற்குறிப்பு : சமூக அறிவர் அரங்கம் – இரண்டாவது சந்திப்பின் அறிக்கையில் ஒரு பகுதி இங்கு வெளியாகியுள்ளது. முழுமையான அறிக்கை பெற விரும்புவோர் "தமிழ் நேயம்" முகவரிக்கு ரூ.10/– அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

முன் அட்டை ஓவியக் குறிப்பு :

தவிப்பும், தேடுதலும், மன உலகச் சிதைவும்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் 7 இதழ் குறித்து

சமூக விஞ்ஞானிகள் அரங்கக் குறிப்புகள் வழியாக சுற்றச்சூழல், இன்றைய விவசாயம் இவை எவ்வளவு பயங்கரமான நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றன என்பதை மட்டுமல்ல, இந்த அபாயங்களுக்கெதிரான போராட்ட இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் சக்திகள் பற்றியும் தெளிவு கிடைத்திருக்கிறது. நம்மாழ்வார், ஜீவானந்தம் போன்ற தோழர்கள் தமிழ்நாட்டில் செய்யவேண்டிய பணிகள் எவ்வளவு உள்ளன என்பதை மேலும் மேலும் உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்த முயற்சிகளுக்கு என்னாலான உதவிகள் எப்போதும் உண்டு.

சுப்பிரபாரதி மணியனின் கட்டுரை சமூக அக்கறை உள்ள நவீன படைப்பாளியின் பொதுவான கவலைகளின் தொகுப்பு. உள்ளார்ந்த கவலையோடு அவர் நுட்பமாக எழுதியிருக்கிறார். நவீன எழுத்தாளர்கள் மட்டுமல்ல, வாசகர்களும் இதில் நிகழ்ச்சி பெறலாம்.

அடுத்து ஆசிரியர் உரை, தமிழ்நேயம். அகமும் புறமும் கட்டுரை – இவைகளும் மனத்தில் உறுத்தல்களை ஏற்படுத்துகின்றன. இன்றைய அரசியல் சமூகப் பிரச்சனைகளின் அருமையான தொகுப்புகள். கு.ச. ஆனந்தனின் "அண்ணாவின் சிந்தனைகள்" கட்டுரையைப் படிக்கும்போது மனதில் பல நெருடல்கள். ஆசிரியர் தருவது அண்ணாவின் ஒரு பக்கம். ஆனால் அரசியல் முழுக்க முழுக்க ஒரு தொழிலாக மாறியது, அரசியல் மேடைகளில் நம் பண்பாட்டு மரபுகள் நொறுங்கி விழுந்தது, அரசியலை மூன்றாந்தர சினிமா ரசனைக்கு அடகு வைத்தது, தமிழ்நாட்டில் லஞ்சமும் ஊழலும் கூச்சமின்றி அங்கீகரிக்கப்படத்தக்கச் சூழல் ஏற்பட்டது. இவ்வாறான "நவீன அரசியல்த்தனம்" அல்லது "அரசியல் நவீனத்துவம்" அண்ணா தொடங்கி வைக்கா விட்டாலும் அண்ணாவின் காலத்தில் இருந்துதானே இவ்வளவும் பூதாகரமாக வெளிப்படையாகத் தொடங்கியது. ஒருவேளை இவை தமிழினத்தின் இன்றைய பலவீனங்களாகக் கூட இருக்க முடியும். ஆனால் அண்ணா காலத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்கே ஆட்சிக்கு வந்தவர்கள் இதே தீமைகளை இன்றுவரை கட்டுக்குள் வைத்திருக்கிறார்களே. அதுமலையாள மக்களின் மகத்துவமா அல்லது சுதந்திரத்திற்குப்பின் தலைமைக்கு வந்த புதிய அரசியல் சக்திகளின் மகத்துவமா? நம் தமிழகத்தை கேரளத்தைப் போல் உருவாக்க அண்ணாவும் அவர் தம்பியரும் நினைத்திருந்தால் சாதித்திருக்கமாட்டார்களா? ஆயிரம்கோடி மக்கட் பணத்தைச் சுருட்டியவர்கள் கூட கூச்சநாச்சம் இல்லாமல் மேடை ஏறுகிறார்களே! தமிழனின் மான உணர்ச்சி என்னாயிற்று? இது எப்போது போயிற்று? ஆனந்தன் அவர்களின் கட்டுரைக்கு ஊடாக நகர நகர எனக்குள்ளே இப்படிப் பல உறுத்தல்கள்.

தமிழ்நேயம், தமிழ், தமிழன், தமிழ்நாடு, தமிழ் உலகம் என்று மட்டுமல்லாமல் தமிழகம், பாரதம், மூன்றாம் உலகம், முழு உலகம், பிரபஞ்சம் என்ற வகையிலும் விரிந்து தமிழனை இருபரிமாணங்களில் விசாலப்படுத்துகிறது.

பொன்னீலன்
24-2-99

படிப்பகம்

www.padippakam.com

நிகழ் : தமிழ் நேயம் (தனிச்சுற்றுக்கு மட்டும்) நன்கொடை ரூ 5/=

# தமிழ்நேயம் : பார்த்தீர்களா? படித்தீர்களா?

தமிழ்மொழி இன்று ஆட்சி மொழியாக இல்லை. பயிற்சி மொழியாக இல்லை. இந்தியை எதிர்ப்பதாக நம்பி ஆங்கிலத்தின் வல்லாண்மைக்கு இடம் கொடுத்து நம்மை நாமே அழித்து கொண்டிருக்கிறோம். தமிழன் தனக்கான அரசியலை மட்டுமல்ல தனக்கான பொருளியல், கல்வி, மருத்துவம் முதலிய அனைத்தையும் தீர்மானிப்பவனாக இருந்தாக வேண்டும்.

வடவரின் வல்லாண்மைக்கும் மட்டுமல்ல சந்தைப் பொருளியல் என்ற பெயரில் வரும் அந்நியரின் வல்லாண்மைக்கு இடங்கொடுப்போம் என்றால் தமிழ்மக்களின் வாழ்விற்கு ஆதாரமான நிலம், நீர், கடல், காடு முதலிய அனைத்தும் அழியும். தமிழ் மக்களின் வாழ்வியல், பண்பாடு, கலை, இலக்கியம் ஆகிய அனைத்தும் அழியும். வரலாற்றிலிருந்து தமிழன் வெளியேற்றப்படுவான். வள்ளுவரையும் இளங்கோவையும் நாம் காப்பாற்ற மாட்டோம்.

இனம், மொழி என்பவற்றோடு இயற்கை என்றும் கல்வி என்றும் மருத்துவம் என்றும் இன்று நாம் பேச வேண்டும். இதற்கான அரசியல் தமிழ்த்தேசியமன்றி வேறில்லை. மார்க்சியரும், பெரியாரியரும் கைகோத்து கொள்வதன் மூலமே தமிழ்த்தேசியம் என்ற அரசியலை நாம் முன்னெடுத்துச் செல்ல முடியும். இன்று நடைபெறும் தமிழியல் ஆய்வுகள் மட்டுமல்லாமல் படைப்புகளும் திறனாய்வுகளும் தமிழ்த்தேசியம் என்ற உணர்வோடுதான் செயற்படவேண்டும். சமதருமம் இன்றி நமக்கு வாழ்வில்லை. உண்மையான கூட்டாட்சி சமதருமத்திற்கு வழி திறந்து வைக்கும். நாடு முழுவதும் பரவியுள்ள தமிழியக்கங்களின் ஒத்துழைப்பை "தமிழ்நேயம்" வேண்டுகிறது.

"எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழ்என்று சங்கேமுழங்கு"

— பாரதிதாசன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்

கி.பழனிச்சாமி (ஞானி)

123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009

அச்சாக்கம்

ஜி.எம்.சிஸ்டம்ஸ், 10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர்.

படிப்பகம்